பக்கங்கள் : 16
viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 23
ஒலி 079 வள்ளுவர் ஆண்டு 2053 மாசி 24 செவ்வாய்க்கிழமை (08.03.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## நாடு சீர்குலைந்துள்ளதால் தொடர்ந்து அமைதியாக இருக்க மாட்டோம்

### ஐ.தே.க கட்சி எச்சரிக்கை



(கொழும்பு)
பொதுமக்களுக்கான அடிப்படை வசதிகளை உறுதிப்படுத்த முடியாவிட்டால், அரசாங்கம் பதவி விலக வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார விடுத்துள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. 15



## அனைத்து வீதி விளக்குகளையும் அணையுங்கள்
– பசில் ராஜபக்ஷ
07 பக்கம் பார்க்க

## 100 ரூபாயைத் தாண்டும் பாணின் விலை



03 பக்கம் பார்க்க

## மனித உரிமை மீறல்கள் இலங்கையில் அதிகரிப்பு
ஹரின் பெர்னாண்டோ 03 பக்கம் பார்க்க

### நாட்டில் இன்றும் 7½ மணி நேர மின்துண்டிப்பு

(கொழும்பு)
நாட்டின் சில வலயங்களுக்கு இன்றும் ஏழரை மணிநேரம் மின்துண்டிப்பு அமுல்படுத்தப்படும் என இலங்கை மின்சார சபை தெரிவித்துள் 15

## தேசிய கால்பந்தாட்ட வீரர் பியூஸ்லஸின் உடல் நல்லடக்கம்

### ஆயிரக்கணக்கானோர் அஞ்சலி



15

# சிறுபான்மையினர் ஓரங்கட்டப்படுகின்றனர்

## ஐ.நாவில் இலங்கை தொடர்பில் பிரித்தானியா கடும் விசனம்



(ஜெனிவா)
சிறுபான்மை சமூகங்களை ஓரங்கட்டும் செயற்பாடுகள் அதிகரித்துள்ளதாக ஐ.நாவில் இலங்கை தொடர்பான விவாத்தில் பிரித்தானியா தனது கடும் விசனத்தை முன்வைத்துள்ளது. (15ஆம் பக்கம் பார்க்க)

### கிளிநொச்சியில் ஆண் ஒருவரின் சடலம் மீட்பு

(கிளிநொச்சி)
கிளிநொச்சி ஜெயபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட காட்டுப்பகுதியில் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இதில் வலைப்பாட்டு பகுதியைச் சேர்ந்த 37 15

### யாழ்.இந்திய துணைத் தூதருடன் மீனவ பிரதிநிதிகள் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்துக்கான இந்திய துணைத் தூதரை யாழ். மாவட்ட மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகள் 15

## வவுனியா தெற்கு பிரதேச செயலக வளாகத்தில் புதிய புத்தர் சிலை



(வவுனியா)
தமிழ் மக்கள் செறிவாக வாழும் பகுதியில் அமைந்துள்ள வவுனியா தெற்கு (சிங்கள பிரதேச செயலக) வளாகத்திலும் புத்தர் சிலை நிறுவப்பட்டுள்ளது.

வவுனியா தெற்கு பிரதேச செயலாளர் மற்றும் பௌத்த பிக்குகள் இணைந்து நேற்று குறித்த புத்தர் சிலையை பிரதிஷ்டை செய்தனர்.

வவுனியா தெற்கு பிரதேச செயலக 15

## மழைவீழ்ச்சி கிடைக்கும் வரை மின்வெட்டு அமுல்

### பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு

(கொழும்பு)
மீண்டும் மழைவீழ்ச்சி ஏற்படும்வரை மக்களுக்கான மின் விநியோகம் மட்டுப்படுத்தப்படலாம் என்று பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று 15

### புத்தூர் நவக்கிரியில்

## பூப்புனித நீராட்டு விழாவில் திருட்டு

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் - புத்தூர், நவக்கிரி பகுதியில் நேற்றிரவு திருட்டு 15

## ஈஸ்டர் தாக்குதல் பாரிய அரசியல் சூழ்ச்சியின் ஒரு பகுதியாகும்


### பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை



(கொழும்பு)
மனித உரிமைகள் பேரவையின் 2021ஆம் ஆண்டு மாநாட்டின்போது இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்ட பிரேரணையின் அடிப்படையிலான ஆதாரங்களைத் திரட்டும் செயற்பாடுகளை தொடர்ந்து முன்னெடுப் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டின் மிகப்பெரிய சிமெந்து தொழிற்சாலை திறப்பு



(கொழும்பு)

மாகம்புர லங்கா கைத்தொழில் வலயத்தில் நிர்மாணிக்கப்பட்ட நாட்டின் மிகப்பெரிய சிமெந்து தொழிற்சாலையின் உற்பத்தி நடவடிக்கைகள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஆகியோரினால் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

சுமார் 250 ஏக்கர் நிலப்பரப்பில் நிர்மாணிக்கப்படும் புதிய உருக்கு ஆலைக்கான முதலீடு 400 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஆகும்.

இதன் உற்பத்திச் செயல்முறை 2024 இன்பிற்பகுதியில் ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. (ம)

## ஜனாதிபதி தலைமையில்

# வாராந்த பொருளாதார சபையை கூட்ட தீர்மானம்

(கொழும்பு)

நாட்டின் பொருளாதார நெருக்கடி நிலைமைகள், விலை அதிகரிப்பு மற்றும் அத்தியாவசிய பொருட்களுக்கான தட்டுப்பாடுகளை அடுத்து மக்களின் நெருக்கடி நிலைமைகள் குறித்து ஆராயவும் பொருளாதார நெருக்கடிகளுக்கு எடுக்க வேண்டிய தீர்வுகள் குறித்து கலந்துரையாடவும் ஜனாதிபதி தலைமையில் வாராந்த பொருளாதார சபையை கூட்டுவதற்கு அமைச்சரவையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் தேசிய பாதுகாப்பு விடயங்கள் குறித்து ஆராயவும் அது குறித்து நடவடிக்கை எடுக்கவும் ஜனாதிபதி தலைமையில் வாராந்த பாதுகாப்பு சபை கூடுவதை போலவே தற்போதுள்ள பொருளாதார நெருக்கடிகளை ஆராய வாராந்த பொருளாதார சபையை கூட்டி நாட்டின் நிலைமைகள் குறித்து ஆராய வேண்டும் எனவும் வாராந்த தீர்மானங்களை அதில் எடுப்பதுடன், அமைச்சரவையின் அனுமதியுடன் அவற்றை நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் இறுதியாக கூடிய அமைச்சரவை கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

அதற்கமைய இந்த வாரத்தில் இருந்து ஜனாதிபதி தலைமையில் பொருளாதார சபையை கூட்டி நாட்டின் பொருளாதார நெருக்கடி நிலைமைகள் குறித்து ஆராயவும் எடுக்க வேண்டிய தீர்மானங்கள் குறித்து அமைச்சரவைக்கு அறிவிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார நிபுணர்கள், மத்திய வங்கி அதிகாரிகள், மத்திய வங்கியின் ஆளுநர் மற்றும் அமைச்சர்கள், தேவைப்படும் பட்சத்தில் பொருத்தமான நிபுணர்களை வரவழைத்து நாட்டின் நெருக்கடி நிலைமைகளை கையாளும்விதம் குறித்து ஆராயப்படும் எனவும் கூறப்படுகின்றது. (ம)

# நாட்டில் நேற்று மேலும் +662 பேருக்கு தொற்று

கொரோனா தொற்று உறுதியான மேலும் 662 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 650, 802 ஆக அதிகரித்துள்ளது.

இவர்களில் 16, 201 பேர் சிகிச்சை நிலையங்களில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ம)


## விற்பனைக்கு

5KVA டைனமோ மற்றும்
7KVA பெல்ட் ரைப் டீசல்
ஜெனரேட்டர் வண்டிலுடன்
விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு
**077 224 2394**

(10529)


# தென்கிழக்கு பல்கலைக்கு முன்னால் தீப்பந்தம் ஏந்தி மாணவர்கள் போராட்டம்



(கொழும்பு)

தென்கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று இரவு பல்கலைக்கழகத்துக்கு முன்னால் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து தீப்பந்தம் மற்றும் சுலோகங்களை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சேர். ஜோன் கொத்தலாவல பல்கலைக்கழகத்தை தனியார் மயப்படுத்தல் மற்றும் புதிய மாணவர் அனுமதி போன்ற விடயங்களை முன்வைத்தும் பல்கலைக்கழகத்தை திறக்குமாறும் கோரியே இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கு கொள்வதற்காக பஸ்களில் வந்திறங்கிய பல்கலைக்கழக மாணவர்கள் இரவு நேரம் என்றும் பாராது பங்கெடுத்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

# மரண அறிவித்தல்

# கிட்டிணன் கோபாலன்



**தோற்றம் : 03.09.1945 மறைவு : 03.03.2022**

கூவில், புலோலி தென்மேற்கு, புலோலியைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட கிட்டிணன் கோபாலன் அவர்கள் கடந்த 03.03.2022 (வியாழக்கிழமை) அன்று பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கிட்டிணன் - செல்லம்மா தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்ற வீரகத்தி மற்றும் செல்லம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும் தவமணி அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான பொன்னையா, சிவபாக்கியம், சிவப்பிரகாசம், லக்சுமி, சந்திரசேகரம், விஜயரட்ணம், நற்குணம் மற்றும் சற்குணம், மதிவதனி ஆகியோரின் பாசமிகு சகோதரரும் கிருஷ்ணானந்தன் (பிரான்ஸ்), பவானி (பிரான்ஸ்), கோபாலகிருஷ்ணன் (இலண்டன்), சிவாகிருஷ்ணன் (பிரான்ஸ்), கிருஷ்ணமோகன் (இலண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் கனகதுர்க்கா (பிரான்ஸ்), கிருஷ்ணகுமார் (பிரான்ஸ்), கிருஷ்ணசுபரதி (இலண்டன்), கீர்த்திகா (பிரான்ஸ்), ரேகா (இலண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் அனோஜன், அனோஜினி, அஜந்தன், அருண்குமார், அபிராமி, அச்சுதன், அஜனி, அரவிந்தன், வைஷ்ணவி, வைஷாளி, வைஷ்ணி, ஆதிரிஜன், ஆதவன், றெமோஜன், கிருஷ்ணி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (08.03.2022) செவ்வாய்க் கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் (இலங்கை நேரப்படி) 1 Avenuedu Marechal Juin 95503 Gonnesse என்னும் இடத்தில் நடைபெற்று பிற்பகல் 4.30 மணியளவில் 95 rue Narcel Sembat 93430 Viille taneuse என்னும் முகவரியில் அமைந்துள்ள மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தொடர்புகளுக்கு :**

கிருஷ்ணானந்தன்(ஆனந்தன்) - மகன் +33647854485 (பிரான்ஸ்)
பவானி - மகள் +33769696426 (பிரான்ஸ்)
கோபாலகிருஷ்ணன்(ஜீவன்) - மகன் +447412655205 (இலண்டன்)
சிவாகிருஷ்ணன்(சிவா) - மகன் +33603673374 (பிரான்ஸ்)
கிருஷ்ணமோகன்(மோகன்) - மகன் +447429200392 (இலண்டன்)
செல்வகிருஷ்ணன்(செல்வம்) - பெறாமகன் +94[illegible]
கிருஷ்ணகுமார்(குமார்) - மருமகன் +3364829[illegible]

கூவில்,
[illegible] தென்மேற்கு,
[illegible].

(10535)

தகவல் :-
குடும்பத்தினர்
021 226 0045

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# 100 ரூபாவைத் தாண்டும் பாணின் விலை

(கொழும்பு)

**பாணின் விலை 100 ரூபாவைத் தாண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.**

எரிவாயு மற்றும் கோதுமை மா தட்டுப்பாடு காரணமாக இதுவரையில் 1000 பேக்கரிகள் மூடப்பட்டுள்ளன.

இந்த நிலையில், பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலை அதிரிக்கக் கூடும் என அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே.ஜயவர்தன தெரிவித்துள்ளார். (நி)



# 60 வீதமான சிற்றுண்டிச்சாலைகள் பூட்டு

(கொழும்பு)

சமையல் எரிவாயு தட்டுப்பாடு காரணமாக நாட்டின் பிரதான நகரங்களில் உள்ள 60 சதவீதமான சிற்றுண்டிச்சாலைகள் மூடப்பட்டுள்ளதாக அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பு மற்றும் அதனை அண்மித்த புறநகர்களில் மாத்திரம் சுமார் 1,500 சிற்றுண்டிச்சாலைகள் மூடப்பட்டுள்ளதாக அதன் தலைவர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார்.

சமையல் எரிவாயு தட்டுப்பாடு காரணமாக அரச மருத்துவமனைகளில் உள்ள சிற்றுண்டிச்சாலைகளை மூட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் மின்சார பிரச்சினை காரணமாக குளிர்சாதன பெட்டிகளில் வைக்கப்பட வேண்டிய உணவுகளிலும் பாதிப்பு ஏற்படுகின்றது.

இதனால் தமது தொழிற்துறையினர் பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (நி)

# மனித உரிமை மீறல்கள் இலங்கையில் அதிகரிப்பு

## மனித உரிமை பேரவையின் கவனத்திற்கு கொண்டு சென்ற ஹரின்

(ஜெனிவா)

பயங்கரவாதச் சட்டம், இராணுவமயமாக்கல் மற்றும் இலங்கையில் ஒட்டுமொத்தமாக சீரழிந்து வரும் மனித உரிமை நிலைமை தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ மனித உரிமைகள் பேரவையின் கவனத்திற்குக் கொண்டு சென்றுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்காமை, தாக்குதல்களின் பின்னணியில் இருப்பவரை பாதுகாக்கும் நடவடிக்கைகள் போன்ற கவலைகளை எழுப்பியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தன்னிச்சையான தடுப்புக்காவல், சித்திரவதை மற்றும் குற்ற ஒப்புதல் வாக்குமூலங்களின் அடிப்படையில் தண்டனைகளை வழங்கும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் மாற்றங்களைச் செய்ய அரசாங்கம் தயங்குவது குறித்தும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மக்கள் சுதந்திரமாக கருத்து தெரிவிக்க முடியாத நிலை மற்றும் அரச உயர்மட்ட பதவிகளில் இராணுவ அதிகாரிகள் நியமிப்பு, சிறுபான்மையினர் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் ரஞ்சன் ராமநாயக்கவின் சிறைவாசம் குறித்தும் ஹரின் பெர்னாண்டோ தெளிவுபடுத்தியுள்ளார்.

மேலும் அத்தியாவசியப் பொருட்களுக்கு கடும் தட்டுப்பாடு, மின்வெட்டு, எரிபொருளுக்கான நீண்ட வரிசையில் நிற்பது மற்றும் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு ஆகியவை குறித்தும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆகவே முன்னெப்போதையும் விட அதிகமான மனித உரிமை அச்சுறுத்தல்களை எதிர்நோக்கும் இலங்கை மக்களுக்கு சர்வதேச சமூகம் ஆதரவளிக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ கேட்டுக் கொண்டார். (நி)

# இந்தியாவின் கடன் வசதியின் கீழ் இலங்கைக்கு எரிபொருட்கள்

(கொழும்பு)

இந்தியா வழங்கும் கடன் வசதியின் கீழ் எதிர்வரும் மார்ச் 15 ஆம் திகதி நாட்டுக்கு எரிபொருள் கிடைக்கும் என எரிசக்தி அமைச்சர் காமினி லொகுகே தெரிவித்தார்.

இலங்கைக்கு கச்சா எண்ணெயை பெற்றுக் கொள்வதற்கான உத்தரவை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மேற்கொள்ளவுள்ளதாக தெரிவித்தார். (நி)

# நெதுங்கமுவே ராஜா யானை உயிரிழப்பு

(கொழும்பு)

கண்டி எசல பெரஹராவில் புனித சின்னங்களை கொண்டு செல்லும் 'நெதுங்கமுவே ராஜா' யானை நேற்று 69 ஆவது வயதில் உயிரிழந்துள்ளது.

நெதுங்கமுவே ராஜா, இந்தியாவினால் இலங்கைக்கு பரிசளிக்கப்பட்டது.

இதேவேளை, நெதுன்கமுவே ராஜாவை தேசிய சொத்தாக பெயரிடுமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆலோசனை வழங்கியுள்ளார். (நி)

# பாடசாலை சிற்றுண்டிச்சாலைகளை மீள திறக்க அனுமதி

(கொழும்பு)

பாடசாலைகளில் சிற்றுண்டிச்சாலைகளை மீளத் திறப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. சுகாதார விதி முறைகளுக்கு ஏற்ப இதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (நி)

# புலிகளுடன் நேருக்கு நேர் மோதியதாக கூறுபவர்கள் எம்மைக் கண்டு அஞ்சுவதேன்?-ஹிருணிகா கேள்வி

(கொழும்பு)

நாட்டில் தற்போதுள்ள நெருக்கடிகளுக்கு தீர்வினைக் கோரி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் இல்ல வளாகத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமைக்காக எம்மை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திர தெரிவித்தார். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பலவீனத்தாலே இவ்வாறு செயற்படுகிறார்.

எதிர்வரும் காலங்களில் மின்சாரம் மற்றும் எரிபொருள் உள்ளிட்டவற்றுக்கான தீர்வினை பெற்றுக் கொள்வதற்காக அந்தந்த துறையுடன் தொடர்புடையவர்களின் இல்லங்களை முற்றுகையிடுவதற்கு அனைவரும் முன்வர வேண்டும் என்றும் ஹிருணிகா பிரேமசந்திர தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

எரிபொருள் நெருக்கடியின் காரணமாக தொழிலுக்கு செல்வோர் மற்றும் மாணவர்கள் என பல தரப்பினரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்தோடு டொலர் நெருக்கடியால் அத்தியாவசியப்பொருட்களுக்கும் பாரிய தட்டுப்பாடு நிலவுகிறது. இவ்வாறு எதிர்கொண்டுள்ள நெருக்கடிகளுக்கு தீர்வினைக் கோரியே ஜனாதிபதியின் வீட்டுக்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தோம்.

புலிகளுடன் நேருக்கு நேர் மோதியதாகக் கூறப்படும், இராணுவ வீரரான ஜனாதிபதி பெண்களான எம்மை கண்டு அஞ்சுவது ஏன்? இது ராஜபக்ஷக்களின் நாடு அல்ல. அவர்கள் வெறும் வர்த்தகர்கள் மாத்திரமே. அவர்களுக்கு தேவையானவற்றைப் பெற்றுக் கொண்டு அமெரிக்காவிற்கு தப்பிச் சென்று விடுவர். ஆனால் நாம் எங்கு செல்வது? இது எமது நாடு. ராஜபக்ஷர்களிடமிருந்து இந்நாட்டை நாம் பாதுகாக்க வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி)

# 13ம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம்-1993.05.31

மறைவு-2009.03.08

அமரர். **குமாரசாமி சங்கீர்த்தனன்**

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மாணவன்

எம் அன்பு மகனே சங்கீர்த்தனா!<br>
13 ஆண்டுகள் ஓடி மறைந்தாலும்<br>
இன்று நினைக்கயிலும்<br>
எம் இதயவறைகள் இறுகுகின்றன<br>
கண்கெட்ட காலனுக்கு<br>
கண்ணில் பட்டது உன்னுயிரோ?<br>
நீங்காத நினைவோடு வாழுகின்றோம்<br>
குதூகலிக்க நீயின்றி<br>
கண் முன்னே நீ வாழ்ந்த காலம்<br>
கனவாகிப் போனாலும்<br>
எம் முன்னே உன் பால்முகம்<br>
எந்நாளும் உயிர் வாழும்

(10516)


2ம் வட்டாரம், கோம்பாவில், புதுக்குடியிருப்பு

077 552 8816<br>
077 135 5460

தகவல்<br>
குமாரசாமி குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.பி.எல்.2022 தொடருக்கான போட்டி அட்டவணை வெளியீடு




பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் நடைபெறவுள்ள 2022 ஆம் ஆண்டுக்கான ஐ.பி.எல். இருபது-20 தொடருக்கான போட்டி அட்டவணையை இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை வெளியிட்டுள்ளது.

கிரிக்கெட் திருவிழாவான ஐ.பி.எல். தொடரின் நடப்பு ஆண்டுக்கான அத்தியாயம், எதிர்வரும் 26 ஆம் திகதி தொடங்கி மே 29 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்த நிலையில் 65 நாட்கள் நடைபெறும் இந்த தொடரில் மொத்தம் 70 லீக் போட்டிகள் நடைபெறுகின்றன. 4 பிளே ஒப் போட்டிகள் நடைபெறுகின்றன.

இதன்படி, இத்தொடரின் முதல் லீக் போட்டியில் நடப்பு சம்பியன் சென்னை சுப்பர் கிங்ஸ் மற்றும் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகள் மோதுகின்றன. இப்போட்டி மும்பை வான்கடே மைதானத்தில் நடைபெறுகிறது.

மே 22 ஆம் திகதி வான்கடே மைதானத்தில் நடைபெறும் இறுதி லீக் போட்டியில், சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணியும் பஞ்சாப் கிங்ஸ் அணியும் பலப்பரீட்சை நடத்துகின்றன.

வான்கடே மைதானம் மற்றும் டி.வை. பட்டீல் ஆகிய மைதானங்களில் தலா 20 லீக் போட்டிகளும், மும்பை பிரபோன் மைதானம் மற்றும் புனே எம்.சி.ஏ.சர்வதேச விளையாட்டரங்கில் தலா 15 போட்டிகளும் நடைபெறுகின்றன.

இரண்டு போட்டிகள் நடைபெறும் நாட்களில் முதல் போட்டி பிற்பகல் 3.30 மணிக்கும், இரண்டாவது போட்டி இரவு 7.30 மணிக்கும் தொடங்கும்.

பிளே ஒப் போட்டிகளுக்கான போட்டிகள் மற்றும் மே 29 ஆம் திகதி நடைபெறும் இறுதிப் போட்டியில் மோதும் அணிகள் மற்றும் மைதானங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

2022 ஆம் ஆண்டுக்கான ஐ.பி.எல். தொடரில், இம்முறை இரண்டு குழுக்கள் பிரிக்கப்பட்டுள்ளன.

குழு 'ஏ' இல் மும்பை இந்தியன்ஸ் அணி, கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி, ராஜஸ்தான் றோயல்ஸ் அணி, டெல்லி கபிடல்ஸ் அணி, லக்னோவ் சுப்பர் ஜியண்ட்ஸ் ஆகிய அணிகள் இடம்பெற்றுள்ளன.

குழு 'பி'இல் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி, சன்ரைசஸ் ஹைதரபாத் அணி, றோயல் செலஞ்சர்ஸ் பெங்களூர் அணி, பஞ்சாப் கிங்ஸ் அணி, குஜராத் டைடன்ஸ் ஆகிய அணிகள் இடம்பெற்றுள்ளன.

இம்முறை இரண்டு புதிய அணிகளின் வருகையுடன் மொத்தம் 10 அணிகள் விளையாட ஒரு அணி, 14 லீக் போட்டிகளில் விளையாடவுள்ளது.

ஒவ்வொரு அணியும் தங்கள் குழுவில் உள்ள அணிகளுடன் இரண்டு முறையும் மற்ற குழுவில் அதே வரிசையில் உள்ள அணியுடன் இரண்டு முறையும் விளையாடும். மற்ற குழுவில் உள்ள மீதமுள்ள நான்கு அணிகளுக்கு எதிராக, ஒவ்வொரு அணியும் ஒரு முறை மட்டுமே விளையாடும். (4-6)

# யாழ்.சிறைச்சாலை உத்தியோகத்தர் தேசிய கபடி அணியில் தெரிவு



யாழ்ப்பாணம் சிறைச்சாலை உத்தியோகத்தர் ராசோ பென்சி இலங்கைத் தேசிய கபடி அணியில் மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.


இந்த மாதம் 17 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதி வரை பங்களாதேஷில் இடம்பெறவுள்ள Bangabandhu Cub -2022 போட்டியில் அவர் கலந்து கொண்டு இலங்கைத் தேசிய கபடி அணிக்காக விளையாடவுள்ளார்.

இதேவேளை, மட்டக்களப்பைச் சொந்த இடமாகவும், யாழ்ப்பாணம் பண்ணையைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட 25 வயதான ராசோ பென்சி கடந்த-2016 ஆம் ஆண்டு ஈரானில் இடம்பெற்ற யூனியன் கபடிப் போட்டியிலும் இலங்கைத் தேசிய கபடி அணியில் விளையாடியிருந்தமை குறிப்பிடத் தக்கது. (4-6-18-104)





**பிரியங்கா**

உள்ள இருந்தாலும் சாப்பிடறானுங்க
வெளிய வந்தாலும் சாப்பிடறானுங்க




என்ன பண்றதுன்னே
தெரியலையே..

**நிசங்கன்**



வாழ்ந்தால் இடியப்பம் மாதிரி வாழணும்...!
என்ன தான் சிக்கல் என்றாலும்
சொதியை கண்டால்
எல்லா சிக்கலும் போயிடும்...

**யாமினி**



நேரத்திலும் நேர்மையாக
இருப்பதிலும் கவனமாக இருங்கள்.
தவற விட்டுவிட்டால்
மறு வாய்ப்பு கிடையாது

**திலக்ஷன்**




**தர்ஷனா**

அள்ளிக்கொடு தவறில்லை
ஆனால் உனக்கு கொஞ்சம்
கிள்ளி வைத்துக் கொள்
ஏனெனில் உனக்கு தேவை
எனில், அள்ளி சென்றவர்
கிள்ளி கூட தருவதில்லை

**பவன்**

பிச்சை எடுக்கவும் முடியாமல்
பிச்சை போடவும் முடியாமல்



அலையுற விநோதமான கூட்டம்
இந்த "நடுத்தர வர்க்கம்"

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாப்பு படையினர் வெளியேறினால் மட்டுமே போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்தலாம்

## பாராளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரன்

(சாவகச்சேரி)

**பாதுகாப்புப் படைகள் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் இருந்து எப்போது வெளியே செல்கின்றனரோ அப்போதே எமது பகுதிகளில் போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்த முடியுமென பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**



அண்மையில் யாழில் விழுது ஆற்றல் மேம்பாட்டு அமையத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு பொதுமக்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில், நான் முதலமைச்சராக இருந்த போது கொழும்பில் இடம்பெற்ற கூட்டமொன்றில் போதைவஸ்து பாவனை தொடர்பில் உயர் மட்டங்களிடம் சில கேள்விகளை எழுப்பியிருந்தேன். அதாவது 2009 மே மாதம் 18திகதி வரை இல்லாத போதைவஸ்து இப்போது வடக்கு-கிழக்கு மாகாணத்தில் எவ்வாறு கிடைக்கின்றது. இன்று இவ்வளவு பாதுகாப்புக்கு மத்தியில் அன்று இல்லாத ஒன்று எப்படி வருகின்றது?

என்ற கேள்விகளை அவர்களிடம் எழுப்பியிருந்தேன்.

அந்தக் காலத்தில் இல்லாத ஒன்று இன்று உள்ளது என்றால் பாதுகாப்புத் தரப்பும் அதனோடு சம்பந்தப்பட்டுள்ளனர் என்பது தான் எனது கருத்து.

எப்போது பாதுகாப்புப் படைகள் வடக்கு-கிழக்கை விட்டு வெளியேறுகின்றனரோ, எப்போது இங்கு பொலிஸார் தமிழ் பேசுபவர்களாக இருக்கின்றனரோ அப்போது தான் போதைவஸ்தினை தடுக்க முடியுமே தவிர தற்போது அதனை செய்ய முடியாத ஒரு நிலையில் இருக்கிறோம்.

இன்று பள்ளிகளில் போதைப்பொருட்களை வீசி விட்டு செல்லும் நிலைமை. பெண் பிள்ளைகள் கூட அதனை தூக்கிச் செல்லும் நிலைமை உள்ளது. இது நிறுவன ரீதியாக இடம்பெறுகின்றது. யார் யார் போதைவஸ்துடன் தொடர்பில் உள்ளனர் என்று பொலிஸாருக்குத் தெரியும்.

எப்போது அரசியல் ரீதியாக முழுமையான மாற்றங்களை கொண்டு வருகின்றோமோ அப்போதே எங்கள் இளைஞர் சமுதாயத்தை மேம்படுத்த முடியும் என மேலும் அவர் தெரிவித்தார்.(4-6-30)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை- காசி காண்டமடம் ஸ்ரீ விசாலாட்சி சமேத விசுவநாத சுவாமி தேவஸ்தான பிலவ வருட மஹோற்சவம் நாளை 9 ஆம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

10 தினங்கள் நடைபெறும் இவ் உற்சவத்தில் எதிவரும் 17 ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும் என ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது. (4)

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை- சங்கரத்தை வீரபத்திர சுவாமி சமேத பத்திரகாளி அம்பாள் ஆலய பங்குனி மாத மஹோற்சவம் இன்று 8 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

12 தினங்கள் நடைபெறும் இவ் உற்சவத்தில் எதிர்வரும் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும் என ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது. (4)

## மகளிர் தின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய காரியாலயமானது. 2022 ஆம் ஆண்டுக்கான சர்வதேச மகளிர் தினத்தை சிறப்பிக்கும் முகமாக "நிலைபேறான எதிர்காலத்திற்காக இன்றே பால்நிலை சமத்துவத்திற்காக பாடுபடுவோம்" எனும் தொனிப்பொருளில் நிகழ்வு ஒன்றினை நாளை காலை 9.30 மணியிலிருந்து 12.30 வரை கிளிநொச்சியில் நடத்த தீர்மானித்துள்ளது.

இந்நிகழ்வானது கிளிநொச்சி- கரைச்சிப் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

எனவே இந்நிகழ்விற்கு அனைவரது ஆதரவையும் தந்துதவுமாறு, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். மாவட்ட பிராந்திய இணைப்பாளர் ரி.கனகராஜ் தெரிவித்துள்ளார். (4-6-104)



ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சரின் பிறந்த தினத்தை முன்னிட்டு நேற்று பருத்தித்துறை இராமகிருஷ்ண பரீட்சை சாரதா நலன்புரி நிலையத்தில் பிரார்த்தனை, பஜனை, இராமகிருஷ்ணர் உபதேசங்கள், வாசிப்பு மற்றும் ஆரதி என்பன இடம்பெற்றன. (படம் : மகாலிங்கம்)

## கந்தபுராண படிப்பு

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலயத்தில் இன்று 8 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு ஆலய பூஜைகளை தொடர்ந்து கந்தபுராண படிப்பு ஆரம்பமாகும் என ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (4-6)

## இராசிபலன்

08.03.2022
மாசி 24 , செவ்வாய்க்கிழமை
சஷ்டி பின்னிரவு 2.17 மணிவரை

பரணி முற்பகல் 7.47 மணிவரை
சுபநேரம் - 10.54-12.24 மணிவரை
இராகுகாலம் -3.24-4.54 மணிவரை

கார்த்திகை விரதம், சஷ்டி விரதம், சர்வதேச மகளிர் தினம் சந்திராஷ்டமம்-சித்திரை

வளவன்

**மேஷம்** தேவையற்ற விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், கொடுக்கல்-வாங்கல்களில் அதிக அக்கறை காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**கடகம்** பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.

**துலாம்** கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், கௌரவக் குறைவான சம்பவங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியங்களில் தாமதம் ஏற்படலாம்.

**மகரம்** புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், பூர்வீகச் சொத்துகளால் நன்மையுண்டு, வியாபார விருத்தியுண்டு, ரோக பயமுண்டு.

**ரிஷபம்** கற்பனை மிகுதியான நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், போசன நன்மையுண்டு, எடுத்த காரியங்களில் அக்கறை காட்ட வேண்டிய நாள்.

**சிம்மம்** செய்யும் தொழிலில் உற்சாகம் காட்டுவீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், காரிய அனுகூலமுண்டு, புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**கும்பம்** பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், சுப விரயங்கள் அதிகரிக்கும் நாள்.

**மிதுனம்** தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், தேவையற்ற மனச் சஞ்சலங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், சுப விரயங்கள் மேலோங்கும் நாள்.

**கன்னி** ரோக பயமுண்டு, தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், தொழில் சம்பந்தமாக முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், தந்தை வழி உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம்.

**தனுசு** செய்தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள், எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், போசன சுகமுண்டு.

**மீனம்** முயற்சிகளில் முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், உறவினர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடன் வாங்கவும் செய்யாதே கொடுக்கவும் செய்யாதே.

# மகளிரின் மகத்தான சேவைகள்

இந்த உலகம் பிரபஞ்சமாக காணப்படுகிறது. உலகத்தை. இறைவனே படைக்கிறான். அவனே காக்கின்றான். பிறப்பு-இறப்பு என்பது இந்த உலகத்தினுடைய நியதியாகும்.

அந்த வகையில் உலகத்திலே பலவகையான தினங்கள் கொண்டாடப்படுகின்றன. ஒரு வருடத்திலே பன்னிரெண்டு மாதங்கள் காணப்படுகின்றன. ஒவ்வொரு மாதத்திலும் ஒவ்வொரு தினங்கள் அல்லது அதற்கும் பல வகையான தினங்கள் எம்மை விரைவாக கடந்து செல்கின்றன.

பங்குனி மாதம் என்றாலே அது ஒரு பொன்னான நாளாகவும் பெண்மையைப் போற்றுகின்ற நாளாகவும் பெண் தெய்வத்தை வணங்குகின்ற நாளாகவும் காணப்படுகின்றன.

அந்த வகையிலே பங்குனி மாதம் எட்டாம் திகதி உலக மகளிர் தினம் கொண்டாடப்படுகிறது.

அவன் இன்றி அணுவும் அசையாது என்று சொல்லுவார்கள். ஒரு பெண் இல்லாமல் இவ்வுலகம் இல்லை. எவரும் இல்லை என்று தான் சொல்ல வேண்டும். அதாவது தான்



உலக மகளிர் தினத்தை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகிறது

மறைந்தாலும் அடுத்த சந்ததியை உருவாக்கி இந்த உலகிலே ஆளவிடுபவள் பெண்ணே.

இறைவன் ஆதியும் அந்தமும் இல்லாதவன். அதனாலே தான் திருவாசகத்திலே திருவெம்பாவை எனும் தொடக்கத்திலே "ஆதியும் அந்தமும் இல்லாதவர்" என்றும் "எம் பாடலே ஓரம்பாவாய்" என்று பாவையாக பெண்ணை குறிப்பிடுகிறார்.

பெண்களைத் தெய்வமாகப் போற்றுவோம். ஆபத்தில் இருந்து கொண்டு அதனில் இருந்து விலக வேண்டும் என்பதற்காக கடவுளை மன்றாடுகின்றோம். தாயே அம்பிகையே, துர்க்கையே, கண்ணகியே என்று பெண்களையே பெண் தெய்வங்களாகப் போற்றுகின்றோம்.

கிறிஸ்தவ ஆலயத்திலே "மரியே" என்று மன்றாடுகிறோம். ஏன் இவ்வளவு வேதனை எம்மை சூழ்கின்றது. எமக்கு பெண் தான் கடவுள் பெண் தான் தெய்வம்.

"அம்மா என்றழைக்காத உயிர் இல்லையே அம்மாவை வணங்காத உறவில்லையே நேரில் நின்று பேசும் தெய்வம் பெற்ற தாய்" ஆகவே பெண் தெய்வத்துக்கு நிகரேதுமில்லை என்றே கூறமுடியும்.

பெண்களின் சேவைகள் சொல்லில் வடிக்க முடியாதவை. இவர்கள் செய்யும் தொழிலை நாம் தெய்வமாக போற்ற வேண்டும். அனைவரையும் தங்கள் பிள்ளைகள் போல் மதிப்பவர்கள் பெண்களே. தாதிகளாக, ஆசிரியர்களாக, உயர் அதிகாரிகளாக பதவி வகிப்பவர்கள் பெண்களே. இன்றைய கால கட்டத்திலே மகளிர் தினத்தை வலுப்படுத்துவோம்.

ஒரு அலுவலகத்திலோ, அல்லது பாடசாலையிலோ தொழில் புரிகின்ற பெண்கள் மகத்தானவர்கள். மாணவர்களுக்கு தங்களாலான அறிவுகளைக் கூறி தங்கள் பிள்ளைகள் போல வளர்த்து அவர்கள் கல்வி எனும் அறிவுதனை ஊட்டி கரை சேர்க்கும் ஆசிரியர்கள் தாயைப் போலவே காணப்படுகிறாள். இவ்வாறு பெண்கள் பல துறைப் பணியாளர்களாக காணப்படுகின்றனர்.

இன்றைய இந்த மகளிர் தினத்தில் அனைத்து பெண்களையும் நலமாக இருக்க வாழ்த்தி வணங்குகின்றோம்.

மகளிருக்காக உலகத்திலே ஒரு சேவைதனைப் பெற்றுக் கொள்ள, மகளிர் அமைப்பினை உருவாக்க அனைத்துப் பெண்களும் ஒன்றிணையுங்கள்.

**யோகர்- சிவஉமாகரன், ஏழாலை.**

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள்

# யாழில் நேற்று போராட்டம்

**(யாழ்ப்பாணம்)**


**பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நேற்று காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் யாழ்ப்பாணத்தில் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.**



யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்திற்கு முன்பாக வடக்கு-கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் அமைப்பின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், வரவேண்டும் வரவேண்டும் ஐ.நா. அமைதிப் படை வரவேண்டும்., வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதி!, அரசியல் கைதிகளை நிபந்தனையில்லாமல் விடுதலை செய்!, பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கு, சர்வதேசமே நாம் அழுவது கேட்கவில்லையா?, வேண்டும் வேண்டும் சர்வதேச விசாரணை வேண்டும்., தமிழரின் படுகொலைக்கு அனைத்துலக விசாரணை வேண்டும்., எங்கே எங்கே உறவுகள் எங்கே? உள்ளிட்ட பதாதைகளை ஏந்தியவாறும் கோசங்களை எழுப்பியவாறும் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

குறித்த போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்கள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-6-33-104)



யாழ்ப்பாணம் - நல்லூர் பாணன்குளம் நாச்சி அம்மன் தேவஸ்தான மஹோற்சவம் நேற்று முன்தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. (படம்:-சிவசாந்தன்)

# யாழ்.சர்வதேச திரைப்பட விழா நாளை யாழ்.பல்கலையில் ஆரம்பம்

(குப்பிழான்)

யாழ்ப்பாண சர்வதேச திரைப்பட விழா-2021 நாளை புதன்கிழமை முதல் 14 ஆம் திகதி திங்கட்கிழமை வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

கொவிட்-19 பெருந்தொற்றுப் பரவலின் காரணமாக 2021 ஆம் ஆண்டில் கொண்டாடப்படாது பிற்போடப்பட்ட இந்த ஆண்டுக்கான திரைப்பட விழாவே இந்த ஆண்டில் கட்டம் கட்டமாகப் பிரித்துக் கொண்டாடப்படுகின்றது.

இதேவேளை, 2021 ஆம் ஆண்டிற்கான முதலாம் கட்டத் திரையிடல்கள் கடந்த தைமாத இறுதியில் கண்டி வீதியில் உள்ள ஜேர்மன் கோத்தே கலாசார நிறுவனத்தின் அனுசரணையுடன் இயங்கும் பண்பாடுகளின் சந்திப்பு வெளியாகிய கலத்தில் இடம்பெற்றிருந்தது.

இதன் தொடர்ச்சியாக இரண்டாம் கட்டத் திரையிடல்களும், நிகழ்வுகளுமே யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இடம்பெறவுள்ளன. இறுதியாக விழாவின் இறுதிக் காட்சியும், விருது வழங்கல் நிகழ்வும் 14 ஆம் திகதி பிற்பகல் 5 மணிக்கு யாழ்ப்பாணம் கார்கில்ஸ் சதுக்கத்தில் அமைந்துள்ள றீகல் சினிமாவில் நடைபெறும்.

"யாழ்ப்பாணக் குடாநாட்டில் சுயாதீனச் சினிமாவினைக் கொண்டாடுதல்" எனும் நோக்கத்துடன் யாழ்ப்பாண சர்வதேச திரைப்பட விழா கொண்டாடப்பட்டு வருகிறது. 2014 ஆம் ஆண்டிலிருந்து வருடம் தோறும் கொண்டாடப்படும் இந்த விழாவானது ஏழாவது ஆண்டினை எட்டியுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (4-6-18)

# விளைச்சல் குறைவடைந்தோரின் விவசாயிகளின் தரவு சேகரிப்பு

(சாவகச்சேரி)

தனங்கிளப்பு கமக்கார அமைப்பிற்குட்பட்ட விவசாய நிலங்களில் 2021-2022 காலப் பகுதியில் காலபோகச் செய்கையில் ஈடுபட்டு விளைச்சல் குறைந்த விவசாயிகளுக்கான பதிவுகள் நாளை 9 மற்றும் 10 ஆம் திகதிகளில் கைதடி கமநல சேவை நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

எனவே குறித்த கமக்கார அமைப்பிற்குட்பட்ட விளைச்சல் குறைந்த விவசாயிகள் ஏக்கர் வரி செலுத்திய பற்றுச்சீட்டு மற்றும் தேசிய அடையாள அட்டை சகிதம் வந்து காலை 9 மணி தொடக்கம் பதிவுகளை மேற்கொள்ள முடியுமென தனங்கிளப்பு கமக்கார அமைப்பினர் தெரிவித்துள்ளனர். (4-6-30)

# கண்காட்சி

(சாவகச்சேரி)

தென்மராட்சி மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் ஆடை வடிவமைப்பு, அழகுக்கலை, மனைப் பொருளியல் கண்காட்சி நாளை மறுதினம் வியாழன் காலை 10 மணிக்கு கைதடி பலநோக்கு கூட்டுறவுச்சங்க மண்டபத்தில் அமைந்துள்ள மகளிர் அபிவிருத்தி நிலைய தலைமை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தினால் நடத்தப்படும் இந்நிகழ்வு தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி சு.உசா தலைமையில் நடைபெறவுள்ளது. (4-6-29)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வதேச சந்தையில் உச்சத்தை தொட்ட

# மசகு எண்ணெய் விலை

(வோஷிங்டன்)

**14 வருடங்களுக்குப் பின்னர் சர்வதேச சந்தையில் ப்ரெண்ட் ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 130 டொலராக உயர்வடைந்துள்ளது.**

ரஷ்யா - உக்ரைன் போர் காரணமாக மசகு எண்ணெய் விலை நாளுக்கு நாள் உயர்வடைந்து வருகின்ற நிலையில் இறக்குமதியாளர்களும் கடும் நெருக்கடியை சந்தித்து வருகின்றனர்.

மேலும், வளர்ந்துவரும் நாடுகளுக்கு மசகு எண்ணெய் விலை உயர்வானது, பொருளாதாரத்தில் மோசமான விளைவை ஏற்படுத்துகிறது.

ரஷ்ய எண்ணெய் தடை குறித்து ஐரோப்பிய நட்பு நாடுகளுடன் அமெரிக்கா விவாதித்து வருவதாக அமெரிக்க இராஜாங்க செயலாளர் அண்டனி பிளிங்கன் நேற்று முன்தினம் தெரிவித்திருந்தார்.

ரஷ்யா உலகின் மூன்றாவது பெரிய எண்ணெய் உற்பத்தியாளராக இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

## ஒரு நாளில் மட்டும்

# 13 வாகன விபத்துகளில் 14 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

நேற்று முன்தினம் மட்டும் இடம்பெற்ற 13 வாகன விபத்துக்களில் 14 பேர் உயிரிழந்துள்ளனர்.

பூவரசங்குளம், கிரிபாவ, இங்கிரிய, பொரளை, பதியத்தலாவ , ஹபரண, கிளிநொச்சி, இரத்தினபுரி மற்றும் ஆனமடுவ ஆகிய பிரதேசங்களில் இந்த விபத்துக்கள் இடம் பெற்றிருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த விபத்துக்களில் 12 வயதிற்கும் 78 வயதிற்கும் இடைப்பட்டோரே உயிரிழந்துள்ளனர்.

அத்துடன் உயிரிழந்த பெரும்பாலானோர் மோட்டார் சைக்கிளை செலுத்தியவர்கள் என பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (நி)

### வீதி விளக்குகளையும் அணையுங்கள்

### பசில் கோரிக்கை

(கொழும்பு)

இந்த மாதம் முழுவதும் தமது பிரதேசத்தில் உள்ள அனைத்து வீதி விளக்குகளையும் அணைக்குமாறும் நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மேலும் உள்ளூராட்சி தலைவர்களும் எதிர்க்கட்சி உறுப்பினர்களும் மின்சாரத்தை சேமிக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என பசில் ராஜபக்ஷ கேட்டுக்கொண்டார். (நி)

# எதிர்க்கட்சி அலுவலகத்தின் மீது தாக்குதல்

## ஆளும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரின் அராஜகம்

(கொழும்பு)

கொழும்பு - கோட்டையில் அமைந்துள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகம் மீது முட்டை வீச்சு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மதுர விதானகே தலைமையில் வந்த குழுவொன்றே இந்த தாக்குதலை நடத்தியுள்ளது என குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

"நல்லாட்சியின் போது மக்களுக்கு செய்தது என்ன" எனக் கேள்வி எழுப்பிய மேற்படி அணியினர், ஐக்கிய மக்கள் சக்தியின் அலுவலகத்துக்கு முன்னால் போராட்டத்திலும் ஈடுபட்டுள்ளனர்.

ஐக்கிய பெண்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் ஹிருணிகா பிரேமச்சந்திர தலைமையில் கடந்த சனிக்கிழமை ஜனாதிபதி இல்லத்தினை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தப்பட்டது.

இதன் எதிரொலியாகவே நேற்று ஆளும் தரப்பு பாராளுமன்ற உறுப்பினர் தமது அதரவாளர்களுடன் கட்சியின் அலுவலகத்திற்கு முன்னால் வந்து போராட்டம் நடத்தியதுடன் முட்டைகளை வீசியும் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர். (நி)




JAFFNA EDUCATION FAIR 2022
Your Future Begins Here...



உயர்கல்வி மற்றும் துறைசார் வழிகாட்டல் கண்காட்சி!

Higher Education & career guidance exhibition

நீங்கள் உயர்தரத்தை நிறைவு செய்தவரா?

அனுமதி இலவசம்

உயர்கல்விக்கான உங்கள் கனவுகளை நனவாக்கிக் கொள்ளுங்கள்

1. 15 க்கும் மேற்பட்ட இலங்கையின் முன்னணி உயர்கல்வி நிறுவனங்கள் பங்குபற்றுகின்றன.
2. முன்னணி பல்கலைக்கழகங்களின் பல்வேறு Bachelors, HND, Diploma, Top-up, Masters படிப்புகளுக்கான திட்டங்களைத் தெரிவு செய்யலாம்.
3. உடனடி அனுமதியுடன் புலமைப்பரிசில்கள்.
4. கண்காட்சியில் கலந்து கொள்ளும் உங்களுக்காக விசே விலைக்கழிவுகளுடன் பாடநெறிக்கான கட்டணங்கள்.

பின்வரும் துறைகளில் உயர்கல்விக்கான வாய்ப்புகளைத் தெரிந்து கொள்ளலாம்

| | | |
|---|---|---|
| Information Technology | Civil Engineering | Biomedical Science |
| Software Engineering | Marine Engineering | Psychology |
| Computer Science | Law | Architecture |
| Business Management | Accountancy & finance | Digital Marketing |
| Engineering | Medicine | |

விபரங்களுக்கு அழையுங்கள் – 0722600620

11th | 12th March 2022 | From 10.00 am to 6.00 pm | @ The Valampuri Hotel, Jaffna

Main Sponsor: A·P·I·I·T Inspire love for learning
Co-Sponsors: INFORMATICS INSTITUTE OF TECHNOLOGY, LITHAN, CLaaS
Official event partner: CICRA CAMPUS
Electronic Media Partners
Print Media Partners: STUDENT Life, வலம்புரி
EVOLUTION



கல்யாணமாலை
சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம் 3<br>கி.பா: 60 சூரி 4 செவ் 8 இல்<br>உயரம் : 5'4"<br>தகைமை/தொழில்: A/L computer Engineer அவுஸ்ரேலியா NOT PR<br>எதிர்பார்ப்பு: அவுஸ்ரேலியா<br>தொ.இ: B/12394 | பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 4<br>கி.பா: சூரி 7 செவ் 8 இல் உயரம்:165 cm<br>தகைமை/தொழில்:BSc in Computer Science (Colombo University) QA Engineer<br>எதிர்பார்ப்பு:உயர்பதவி<br>தொ.இ:G/12449 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை 1<br>கி.பா: 9 சூரி 4 செவ் 6 இல் உயரம்:5'4"<br>தகைமை/தொழில்: நெதர்லாந்து<br>எதிர்பார்ப்பு: உள்நாடு/வெளிநாடு<br>தொ.இ: B/12395 | பிறப்பு: 1986 இந்து நட்சத்திரம்: பரணி 4<br>கி.பா: 85 ¾ சூரி 1 செவ் 9 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: அரசதனியார் உத்தியோகம்<br>தொ.இ:G/12451 |
| பிறப்பு: 1973 இந்து நட்சத்திரம்: அவிட்டம் 2<br>கி.பா : 40 சூரி 3 செவ் 10 இல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: IT அலுவலக முகாமையாளர்<br>எதிர்பார்ப்பு:விவாகரத்தானவர் சாதாரண படித்த பெண் உள்நாடுமட்டும்<br>தொ.இ: B/12396 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம் 1<br>கி.பா: 33¼ சூரி 4 செவ் 9<br>உயரம்:5'2"<br>தகைமை/தொழில்: ICT ,MSc(DO)<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி<br>தொ.இ:G/12452 |
| பிறப்பு:1985இந்து நட்சத்திரம்: பூரம் 2<br>கி.பா:53 ½சூரி, செவ் 12 இல்<br>உயரம்: 165 cm<br>தகைமை/தொழில்: MSC, BSC CivilEng./<br>எதிர்பார்ப்பு: அரசதனியார் உத்தியோகம்<br>தொ.இ: B/12398 | பிறப்பு: 1983 இந்து நட்சத்திரம்: ரேவதி 4<br>கி.பா: சூரி 1 செவ் 12 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: அரசதனியார் உத்தியோகம்<br>தொ.இ:G/12453 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக நாடுகள் உதவ வேண்டும்

## இந்த நொடிப்பொழுதில் கூட நான் கொல்லப்படலாம்

### –உக்ரைன் ஜனாதிபதி உருக்கம்–

(கீவ்)

உலக நாடுகள் இந்தப் போரை இனியும் வேடிக்கை பார்க்கக் கூடாது. எங்களுக்கு உதவ முன்வர வேண்டும். எங்களுக்கு தேவையான ஆயுதங்களை தாருங்கள்.

என்னைப் பார்ப்பது இதுவே கடைசியாக இருக்கலாம். நான் செத்தாலும் ஆட்சி தொடர்ந்து நடக்கும் என உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி தெரிவித்தார்.

தொலைக்காட்சி ஒன்றின் சிறப்புப் பேட்டியின் போது போர் நிலவரம் மற்றும் எதிர்கால சூழ்நிலை பற்றி அவர் உருக்கமாக பல்வேறு தகவல்களை வெளியிட்டார்.

உக்ரைன் வான்பரப்பை விமானங்கள் பறக்க தடை செய்யப்பட்ட பகுதியாக அறிவிக்க வேண்டும் என தொடர்ந்து நான் வலியுறுத்தி வருகிறேன். அப்படி அறிவித்தால் உக்ரைன் மீது பறந்து வரும் ரஷ்ய விமானங்களை மற்ற நாட்டு போர் விமானங்களால் சுட்டு வீழ்த்த முடியும்.

ஆனால் நேட்டோ நாடுகளும், அமெரிக்காவும் எனது கோரிக்கையை ஏற்க தயங்குகின்றன. இதனால் உக்ரைன் மக்கள் அடுத்தடுத்து பாதிப்புகளை சந்தித்து வருகிறார்கள். அடுத்து என்ன நடக்கும் என்பது உறுதியாகத் தெரியவில்லை.

ரஷ்ய படைகள் எங்களின் முக்கிய நகரங்களை முற்றுகையிட்டுள்ளன. குடியிருப்பு பகுதிகளில் அதிகமாக குண்டுகளை போடுகிறார்கள். இதனால் மக்கள் வெளியேற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எனது உயிருக்கும் ஆபத்து ஏற்பட்டு இருக்கிறது. இதுவே நீங்கள் என்னை பார்க்கும் கடைசித் தருணமாகக் கூட இருக்கலாம்.

ஐரோப்பிய நாடுகள் ஒருங்கிணைந்து எங்களுக்கு அதிக போர் விமானங்களை வழங்க வேண்டும். அப்படி கொடுத்தால்தான் உக்ரைன் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள முடியும். இந்த விடயத்தில் ஐரோப்பிய நாடுகள் நல்ல முடிவை எடுக்கும் என்று எதிர்பார்க்கிறேன்.



என்னை படுகொலை செய்வதற்கு ரஷ்ய ஜனாதிபதி புடின் சிறப்புப்படைகளை அனுப்பி உள்ளார். நூற்றுக்கணக்கான ரஷ்ய உளவுப்படைகள் கீவ் நகரில் உள்ளன. அவர்கள் என்னை குறிவைத்து நகர்ந்து வருகிறார்கள்.

எந்த நேரத்திலும் நான் படுகொலை செய்யப்படலாம். இதை எல்லாம் நான் ஏற்கனவே நன்கு உணர்ந்துள்ளேன். எனவே உக்ரைன் நாட்டு நலனுக்காக மாற்றுத்திட்டங்களை ஏற்கனவே தயார் செய்து வைத்து விட்டேன். நான் கொல்லப்பட்டாலும் உக்ரைனில் இந்த ஆட்சி தொடர்ந்து நடைபெறும். அதை யாராலும் முடக்க முடியாது. எனக்குப் பிறகும் உக்ரைன் நாட்டை பாதுகாத்துக் கொள்ள மக்கள் துணிந்து போராடுவார்கள்.

இதற்காக வெளிநாடுகளில் உள்ள உக்ரைன் மக்கள் வந்து கொண்டு இருக்கிறார்கள்.

எங்கள் மண்ணை நாங்கள் விட்டுக் கொடுக்க மாட்டோம். ஒரு போதும் பின்வாங்கும் பேச்சுக்கே இடம் இல்லை என அவர் தெரிவித்தார். (நி)

# பொருள

## ரஷ்யாவி

(மொஸ்கோ)

பல்வேறு பொருளா
உணவு விற்பனைக்
தெரிவிக்கப்படுகின்றது

ரஷ்யா உக்ரைன் மீது கடந்த பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதி முதல் பயங்கரமான தாக்குதலைத் தொடங்கியுள்ளதுடன், உக்ரைனின் கெர்சன் உள்ளிட்ட சில முக்கிய நகரங்களை ரஷ்ய படைகள் கைப்பற்றியுள்ளன.

உக்ரைனிற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில், உலக நாடுகள் பல

# அனைத்தையும் நிறுத்துகிறோம்

## உலக வங்கி அதிரடி

(மொஸ்கோ)

ரஷ்யாவில் அனைத்து திட்டங்கள் நிறுத்தப்படுவதாக உலக வங்கி அதிரடி அறிவித்துள்ளது. உக்ரைன் மீது போ தொடுத்துள்ள ரஷ்யா மீதான மேற்கத் நாடுகளின் பிடி இறுகி வருகிறது.

இந்நிலையில் ரஷ்யாவிலும் அதன் ந நாடான பெலாரஸ் நாட்டிலும் அனை திட்டங்களையும் உலக வங்கி அதிரடி நிறுத்தி உள்ளது.

# சேர்னீகீவ் நகரை மீண்டும் மீட்டது உக்ரைன்

(கீவ்)

ரஷ்யா வசம் சென்ற முக்கிய நகரை உக்ரைன் மீண்டும் கைப்பற்றியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

உக்ரைனிலுள்ள முக்கிய நகரமான சேர்னீகீவ்வை ரஷ்யா சமீபத்தில் கைப்பற்றியிருந்தது. இந்த நிலையில் விடாமுயற்சியுடன் அந்த நகரை மீட்க போராடிய உக்ரைன் மீண்டும் கைப்பற்றியுள்ளது.

கார்கிவ் நகர மையத்திலிருந்து தென்கிழக்கே 36 கிலோ மீற்றர் தொலைவில் இந்த நகரம் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(நி)

# நான்கு நகரங்களில் யுத்த நிறுத்தத்தை அறிவித்த ரஷ்யா

(மொஸ்கோ)

உக்ரைன் தலைநகர் கீவ்வை பிடிக்க ரஷ்ய திட்டமிட்டுள்ளது. அதன் காரணமாக தொடர்ந்து நடைபெற்று வரும் சண்டையால் கீவ், கார்கிவ், மரியபோல், சுமி ஆகிய நகரங்களில் இருந்து பொதுமக்கள் வெளியேற முடியாத நிலை ஏற்பட்டது.

பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மேக்ரான், மக்கள் வெளியேறு வகையில் போரை நிறுத்த வேண் என ரஷ்யாவுக்கு வேண்டுகோ விடுத்தார்.

அதனை ஏற்றுக்கொண்டு கீ கார்கிவ், மரியபோல், சுமி ஆ நான்கு நகரங்களில் போர் நிறுத் படுவதாக ரஷ்ய இராணுவம் அ வித்துள்ளது.

# இரவு நேரங்களிலும் உக்ரைனில் குண்டு மழை

(கீவ்)

உக்ரைன் தலைநகர் கீவ் மற்றும் இரண்டாவது பெரிய நகரான கார்கிவ் ஆகியவற்றை கைப்பற்ற ரஷ்யப் படைகள் தீவிரமாக தாக்குதல் நடத்தி வருகின்றன.

இந்நிலையில், உக்ரைனின் மத்திய, வடக்கு, தெற்கில் இருக்கும் நகரங்களில் இரவு நேரத்திலும் ரஷ்யப் படைகள் குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தியதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.



உக்ரைன் மீது 12 ஆவது நாளாக ரஷ்யா போர் தொடங்கி தாக்குதல் நடத்தி வருகின்றது.

முக்கிய நகரங்களில் தொடர்ந்து தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகிறது. அவற்றுக்கு எதிராக உக்ரைன் இராணுவமும் கடுமையாகப் போராடி வருகின்றது. (நி)

# சரணடையாவிட்டால் படையெடுப்பு தொடரும்

## உக்ரைனை எச்சரித்த ரஷ்யா

(மொஸ்கோ)

உக்ரைன் அரசு சரணடையாவிட்டால் படையெடுப்பு தொடரும் என ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தெரிவித்துள்ளார்.

ரஷ்யப்படைகளின் ஆக்கிரமிப்புகளை எதிர்கொண்டு உக்ரைனின் பிரதான நகரங்களில் இருந்து 1.5 மில்லியனுக்கும் அதிகமான பொது மக்கள் வெளியேறி வருவதாகவும் புடின் தெரிவித்துள்ளார்.

போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறு காரணமாக மரியுபோல் நகரி உள்ள பொதுமக்களை வெளியே றும் முயற்சி தோல்வி யடைந்து ளது.

அந்நகரம் இன்னும் மின்சார மற்றும் நீரின்றி உள்ளதாக வெ நாட்டு ஊடகங்கள் செய்தி வெ யிட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாடு

# ளாதார தடைகளின் எதிரொலி
# வில் இறுக்கமாகும் உணவுக் கட்டுப்பாடு !

**ளாதாரத்தடைகளின் எதிரொலியினால் ரஷ்யாவில் க்கு கடும் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளதாக றது.**



ரஷ்யாவிற்கு எதிராக கடுமையான பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளன. இவ்வாறு மேற்கத்திய நாடுகள் விதித்த பொருளாதார மற்றும் கலாசார தடையால் ரஷ்யா கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

உக்ரைன் மீது தொடர்ச்சியாக ரஷ்யா ஏவுகணைத் தாக்குதல், மற்றும் வான்வெளித் தாக்குதல்களை தொடர்ந்து நடத்தி வருகின்றது.

இந்நிலையில் பல்வேறு நாடுகளும் ரஷ்யாவிற்கு பொருளாதாரத் தடை விதித்துள்ளமையினால் ரஷ்யாவில் உணவு விற்பனைக்கு கடுமையான கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## போரை நிறுத்தக்கோரி ரஷ்யாவில் ஆர்ப்பாட்டம்
# ஆயிரக்கணக்கானோர் கைது




(மொஸ்கோ)

உக்ரைன் மீது ரஷ்யா தொடுத்துள்ள போரை உடனடியாக நிறுத்துமாறு வலியுறுத்தி ரஷ்யாவின் பல்வேறு நகரங்களில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை ஆயிரக்கணக்கானோர் திரண்டு போராட்டங்களில் ஈடுபட்டனர்.

தலைநகர் மொஸ்கோ உட்பட ரஷ்யாவின் 56 நகரங்களில் போராட்டங்கள் நடைபெற்றன.

நாட்டின் எதிர்க்கட்சி தலைவர் நவால்னியை விடுவிக்கக்கோரி கடந்த ஆண்டு ஜனவரி மாதம் இடம்பெற்ற பாரிய போராட்டத்தின் பின்னர் ரஷ்யாவில் நடைபெற்ற பெரும் போராட்டமாக இது அமைந்திருந்தது.உக்ரைனின் பல்வேறு நகரங்களை கைப்பற்றிய ரஷ்ய படைகள், தலைநகர் கீவ்வை கைப்பற்றுவதில் மும்முரம் காட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

# ரஷ்யாவின் ஏவுகணை தாக்குதலால் தகர்ந்தது வின்னிட்சியா விமான நிலையம்



(கீவ்)

ரஷ்யாவின் ஏவுகணை தாக்குதலில் உக்ரைனின் வின்னிட்சியா விமான நிலையம் முழுமையாக தகர்க்கப்பட்டுள்ளதாக உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி தெரிவித்தார்.

உக்ரைனின் மேற்கு மத்திய பகுதியில் அமைந்துள்ள வின்னிட்சியா விமான நிலையம் மீது ரஷ்யப் படைகள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அடுத்தடுத்து 8 முறை ஏவுகணை தாக்குதல்களை நடத்தியதாகவும், இதில் விமான நிலையம் முற்றிலுமாக அழிக்கப்பட்டதாகவும் ஜெலென்ஸ்கி தெரிவித்தார்.

அமைதியான மற்றும் நல்ல உள்ளம் கொண்ட வின்னிட்சியாவை அவர்கள் தாக்கினர். விமான நிலையத்தை முழுவதுமாக தகர்த்து விட்டனர். நமது உட்கட்டமைப்பு, நாம் கட்டியெழுப்பிய வாழ்க்கை மற்றும் நமது பெற்றோர், தாத்தா, பாட்டி என உக்ரேனியர்களின் பல தலைமுறைகளை அவர்கள் தொடர்ந்து அழித்து வருகின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பின் 12 ஆவது நாளான நேற்று பல நகரங்கள் மற்றும் விமானத் தளங்கள் குண்டுவீச்சு, ஷெல், பாலிஸ்டிக் ஏவுகணைகளால் தாக்கப்பட்டுள்ளன.

எனினும் வின்னிட்சியா மத்திய உக்ரைனின் மேற்குப் பகுதியில், ரஷ்யா மற்றும் பெலாரஸ் எல்லைகளிலிருந்து வெகு தொலைவில் உள்ளது. இங்கு சண்டைகள் குறைந்தளவே இடம்பெற்று வருகின்ற போதும் விமான நிலையம் இலக்கு வைத்து தகர்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## முழு வீச்சில் தாக்குதல் நடத்த
# தயாராகும் ரஷ்யா



(கீவ்)

உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடங்கி 12 ஆவது நாளாகவும் தாக்குதல் நீடித்து வருகின்ற நிலையில், தலைநகர் கீவ் மீது முழு வீச்சில் தாக்குதல் நடத்த தயாராகி வருவதாக உக்ரைன் தெரிவித்துள்ளது.

ரஷ்யப் படைகள் கீவ் நகரத்தின் மீதான தாக்குதலுக்கான பொருட்களை சேகரிக்கத் தொடங்கியுள்ளதாகவும், டாங்கர்கள் மற்றும் மோட்டார் பொருத்தப்பட்ட படைப் பிரிவுகள் மூலம் கீவ் நகரின் இர்பின் பகுதியை நோக்கி முன்னேறி வருவதாகவும் உக்ரைன் இராணுவத் தளபதி தெரிவித்தார்.

ரஷ்ய இராணுவ கமாண்டர்கள் எரிபொருளை கப்பல் மூலம் தங்கள் படைகளுக்கு, பெலாரஸிலிருந்து செர்னோபிள் விலக்கு மண்டலம் வழியாக அனுப்பி வருகின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கெர்சன் உள்ளிட்ட சில நகரங்களை ரஷ்ய படைகள் கைப்பற்றியுள்ள நிலையில், ரஷ்ய படையினரால், கீவ், கார்கிவ் நகரங்களைக் கைப்பற்ற ஏவுகணை வீச்சு, வான்வெளி தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடமுருட்டி குளத்தின் கீழ் 356 ஏக்கரில் சிறுபோகம்

(அக்கராயன்)

கிளிநொச்சி குடமுருட்டிக் குளத்தின் கீழ் 356 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கையில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

இக்குளத்திற்கான சிறுபோக நெற்செய்கைக் கூட்டம் நடைபெற்று கூட்டத் தீர்மானத்தின் படி பயிர்ச்செய்கையில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். குடமுருட்டிக் குளம் முழுமையாக புனரமைக்கப்பட வேண்டும் என்பது விவசாயிகளின் கோரிக்கையாகும். பூநகரியில் உள்ள குடமுருட்டிக் குளம், கரியாலை நாகபடுவான் குளம் என்பன 2010 ஆம் ஆண்டிற்குப் பின்னர் முழுமையான புனரமைப்பு வேலைகள் இடம் பெறவில்லை.

சிறிய வேலைகள் இடம் பெற்றுள்ள போதிலும் முழுமையான புனரமைப்பு இரு குளங்களிலும் இடம் பெறாததன் காரணமாக பயிர்ச்செய்கைக் காலங்களில் விவசாயிகள் பல நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

குளங்கள் முழுமையாக புனரமைக்கப்படும் போது கூடுதலான நிலப்பரப்பில் சிறுபோக நெற்செய்கையில் விவசாயிகள் ஈடுபடக் கூடிய நிலைமை ஏற்படும். குளங்களை புனரமைப்பதற்கு நீர்ப்பாசனத் திணைக்களம் திட்டங்களை வரைந்து கையளித்துள்ள போதிலும் நிதி கிடைக்காததன் காரணமாகவே பெரியளவிலான புனரமைப்பு வேலைகளை முன்னெடுக்க முடியவில்லை என நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகளினால் கூட்டங்களில் தெரிவிக்கப்பட்டு வருகின்றது. (4-6-350)

# மணல் அகழ்வைத் தடுக்க காவலரண் அமைக்குக

## பொது அமைப்புகள் கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு அம்பலவன் பொக்கணை கிராம அலுவலர் பிரிவில் தொடர்கின்ற சட்டவிரோத மணல் அகழ்வினைத் தடுப்பதற்கு மாத்தளன் சந்தியில் பொலிஸார் பணியில் ஈடுபட வேண்டும் என அப்பகுதி பொது அமைப்புகள் வலியுறுத்தி உள்ளன.

இக்கிராம அலுவலர் பிரிவில் இருந்து கூடுதலான மணல் களவாக மாத்தளன் சந்தி வழியாகவே வெளியிடங்களுக்குக் கொண்டு செல்லப்படுகின்றன. மாத்தளன் சந்தியில் இராணுவத்தினர் பணியில் உள்ளனர்.

இராணுவத்தினருடன் பொலிஸாரும் இணைந்து பணியாற்றுவதன் மூலம் சட்டவிரோத மணல் அகழ்வினைக் கட்டுப்படுத்த முடியும் எனவும் தெரிவித்தனர். (4-6-350)

# சட்டவிரோத மது உற்பத்தியை தடுத்து நிறுத்துங்கள்

## மாதர் சங்கம் கோரிக்கை

(அக்கராயன்)

கிளிநொச்சி பூநகரி முக்கொம்பன் கிராமத்தில் சட்டவிரோத மது உற்பத்தி காரணமாக குடும்ப வன்முறைகள் அதிகரித்துள்ளதாக மாதர் சங்கத்தினரால் தெரிவிக்கப்படுகின்றது.

குடும்ப வன்முறைகள் காரணமாக கூடுதலான பிள்ளைகள் பாடசாலைகளுக்குச் செல்வதில்லை எனவும் மாதர் சங்கத்தினரால் தெரிவிக்கப்படுகின்றது.

பூநகரி பொலிஸார் முக்கொம்பன் கிராமத்திற்கு வருகை தந்து சட்டவிரோத மது உற்பத்தியினை தடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் எனவும் மாதர் சங்கத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-6-350)

# உச்சம் தொட்டது தங்கத்தின் விலை



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் தங்கத்தின் விலை ஆயிரத்து 500 ரூபாயினால் உயர்வடைந்து ஒரு இலட்சத்து 32 ஆயிரம் ரூபாய் என வரலாற்றில் முதல் தடவை புதிய உச்சத்தைத் தொட்டுள்ளது.

ரஷ்யா - உக்ரைன் மீது போர் தொடுத்துள்ளதால் சர்வதேச பங்குச் சந்தை மீதான முதலீடு குறைவடைந்து தங்கம் மீதான முதலீடு அதிகரித்துள்ளது. இதனால் உலக சந்தையில் தங்கத்தின் விலை மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (4-6-33)

# மேலதிக அரச அதிபர் முல்லைத்தீவிற்கு நியமனம்




(பனிக்கன்குளம்)

மன்னார் மாவட்ட செயலகத்தின் மேலதிக அரசாங்க அதிபராக கடமையாற்றிய எஸ்.குணபாலன் முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராக (காணி) தனது கடமைகளை கடந்த வியாழக்கிழமை முதல் மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதன் முன்னிலையில் உத்தியோக பூர்வமாக பொறுப்பேற்றுக் கொண்டார்.

இவரது நியமனத்தின் ஊடாக முல்லைத்தீவு மாவட்டத்தில் நீண்டகாலமாக நிலவி வந்த மேலதிக அரசாங்க அதிபர் (காணி) வெற்றிடமானது பூர்த்தி செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-6-281)

# வவுனியாவில் நாளை தொழில் சந்தை

(நெளுக்குளம்)

மனிதவலு வேலைவாய்ப்பு திணைக்களத்தினால் வவுனியா மாவட்ட செயலகத்தோடு பிரதேச செயலகங்களும் இணைந்து நடத்தும் மாபெரும் தொழில் சந்தை நாளை புதன் கிழமை வவுனியா மாவட்ட செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

இத் தொழில் சந்தையில் 25 இற்கும் மேற்பட்ட நிறுவனங்கள் நேரடியாக வருகைதந்து தொழில் வாய்ப்பினை வழங்கவுள்ளன.

எனவே தொழில் தேடும் அனைவரும் இதில் கலந்து கொண்டு தங்களுக்கு தேவையான தகுதியான ஓர் தொழிலினை பெற்றுக்கொள்ள முடியும். (4-6-299)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 140 | 200 | 200 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 110 | 120 |
| பச்சைமிளகாய் | 350 | 350 | 450 | 500 |
| தக்காளி | 220 | 220 | 260 | 350 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 100 | 100 | 80 |
| கோவா | 100 | 120 | 100 | 120 |
| கரட் | 250 | 350 | 400 | 400 |
| பூசணி | 140 | 140 | 140 | 140 |
| புடோல் | 250 | 200 | 200 | 160 |
| வாழைக்காய் | 80 | 60 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 180 | 120 | 180 | 240 |
| பெரிய வெங்காயம் | 160 | 140 | 140 | 200 |
| பாகற்காய் | 400 | 300 | 400 | 400 |
| வெண்டிக்காய் | 200 | 160 | 180 | 300 |
| கருணைக் கிழங்கு | 80 | 120 | 100 | 150 |
| பயற்றங்காய் | 180 | 200 | 200 | 250 |
| லீக்ஸ் | 140 | 140 | 160 | 160 |
| பீற்றூட் | 160 | 180 | 200 | 200 |
| கறிமிளகாய் | 300 | 250 | 300 | 250 |
| முருங்கைக்காய் | 1000 | 1000 | 1200 | 1200 |
| போஞ்சி | 260 | 250 | 200 | 350 |
| கத்தரிதம்புள்ள | 140 | 100 | 160 | 180 |
| கீரை - 1 பிடி | 100 | 80 | 80 | 80 |
| தேசிக்காய் | 100 | 120 | 100 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 75 | 70 | 60-80 |
| இராசவள்ளி | 160 | 140 | 160 | 180 |
| வெங்காயப்பூ | 160 | 130 | 200 | 170 |
| முள்ளங்கி | - | 100 | 80 | 100 |
| பொன்னாங்காணி | 60 | 80 | 80 | 50 |
| வல்லாரை | 20 | 80 | 40 | 40 |
| ஈரப்பலா | 60 | - | 120 | - |

# 'வடந்தை' நூலுக்கான ஆக்கங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண, கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை, இளைஞர் விவகார அமைச்சினால் வருடா வருடம் வெளியிடப்படும் வடமாகாண பண்பாட்டம்சங்களை உள்ளடக்கிய "வடந்தை" நூலுக்கான ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

ஆக்கங்கள் வடமாகாண பண்பாட்டுக்கூறுகள், வாழ்வியலில் யோகக்கலை, பாரம்பரிய உணவுப் பழக்க வழக்கங்கள், கலையோடு இயைந்த வாழ்வு, குருகுலக் கல்வி முதல் நிகழ்நிலை செயலியூடான (zoom) கல்வி முறை வரை, மறைந்த கலைஞர்களின் வாழ்வியல் பற்றிய அனுபவப்பகிர்வு போன்ற தலைப்புக்களில் அமைய வேண்டும்.


ஆக்கங்கள் அனைத்தும் வடக்கு மாகாணம் சார்ந்ததாக இருத்தல் வேண்டும். அரசியல் கலப்பற்றதாக இருத்தல் அவசியம். தனிப்பட்ட நபரை பாதிக்காது கருத்துக்கள் முன்வைக்கப்பட்டிருத்தல் வேண்டும். ஒருவர் ஒரு கட்டுரை மட்டுமே சமர்ப்பிக்க முடியும். ஆக்கமானது அவரவர் சொந்த ஆக்கமாக இருப்பதனை உறுதிப்படுத்தல் வேண்டும். முன்னர் எந்தப் பத்திரிகைகளிலோ, சஞ்சிகைகளிலோ பிரசுரிக்கப்படாத ஆக்கங்களாக இருத்தல் வேண்டும். கணனியில் தட்டச்சு செய்யப்பட்ட (fontsize-12) மென் பிரதிகளை (Soft copy) மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைப்பதுடன் அதன் வன்பிரதியினை (Hard copy) அலுவலக முகவரிக்கு தபால் மூலமாகவோ, நேரடியாகவோ சமர்ப்பிக்கவும். A4 தாளில் நான்கு பக்கங்களிற்கும் மேற்படாமல் இருத்தல் வேண்டும். கையெழுத்து பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் ஆக்கங்கள் நிராகரிக்கப்படும் போன்ற விதிமுறைகளுக்கமைய சமர்ப்பிக்க வேண்டும்.

ஆக்கங்களை 07.04.2022 இற்கு முன்னர் பிரதிப் பணிப்பாளர், பண்பாட்டலுவல்கள் திணைக்களம், வடமாகாணம் எனும் முகவரிக்கோ அல்லது npc.culture@yahoo.com என்னும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

மேலதிக தகவல்களுக்கு 021 205 4105 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு பண்பாட்டலுவல்கள் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் திருமதி லாகினி நிருபாகரன் அறிவித்துள்ளார். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலிங்கராயன் அமைத்த திருக்காமக்கோட்டம்



பேராசிரியர் சி.பத்மநாதன்,
தகைசார் பேராசிரியர், வரலாற்றுத்துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்,
வேந்தர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(நேற்றைய தொடர்ச்சி)

இரண்டாம் வரியிலுள்ள தொடர்களை "சாஸனம் சாஸ்வதம் சம்பு (?) ஸ்ரீகோணபர்வதம் திருக்கோணமலை மத்ஸ்யகேஸ்வர முடை மஹாதேவற்கு" என்று இந்திரபாலா படித்துள்ளார்.

4 முற்காலங்களிலே திருகோணமாமலைக் கோயிலின் உடையாரைத் தான்தோன்றியாகக் கொள்ளும்மரபு உண்டென்பதைச் சாசனக் குறிப்பினால் மட்டுமே அறிய முடிகின்றது. திருக்கோணமலைக் கடற்கரைக்கு அண்மையிற் கடலடியிற் படிந்துள்ள அழிபாடுகளிலிருந்து எடுத்து வந்த லிங்க வடிவமொன்றை ஸ்வயம்பு லிங்கமென்று மைக் வில்ஸன் (Mike Wilson) அடையாளப்படுத்தியமை இங்கு கவனத்திற்குரிய ஒன்றாகும்.

கோமரங் கடவலவில் அமைந்திருக்கும் பாறைக் கல்வெட்டுக் குறிப்பிடும் தலம் ஸ்ரீ கோணபர்வதம் திருக்கோணமாமலை தான் என்பதைத் தெளிவுபடுத்திக் கொண்டபின் அங்கு குலோத்துங்க காலிங்கராயன் புரிந்த திருப்பணிகளை இலகுவாகப் புரிந்துகொள்ள முடிகின்றது.

*காலிங்கராயன் அமைத்த திருக்காமக் கோட்டம்*

திருக்கோணமாமலை மீது மிகுந்த அபிமானங்கொண்ட சோழ மன்னர் அங்கு பல திருப்பணிகள் புரிந்தமை பற்றிய சாசனக்குறிப்புகள் உண்டு.ஈழம் மும்முடி சோழ மண்டலமானதன் விளைவாக அவை நடைபெற்றன. அவற்றைப் பற்றிய விபரங்கள் காலப்போக்கிற் குளக்கோட்டன் கதையிலே கலந்துவிட்டன. புனருத்தாரணமாகிவிட்ட கோணேசர் ஆலயம் மத்ஸ்யகேஸ்வரம் என்ற புதிய பெயருடன் விளங்கியது என்பதை நிலாவெளிக் கல்வெட்டின் மூலம் உணர்ந்து கொள்ள முடிகின்றது.

ஏறக்குறைய 200 வருடங் களுக்குப் பின் சோழர் கலைப்பாணியில் ஏற்பட்ட வளர்ச்சியொன்றின் பயனாக மத்ஸ்யகேஸ்வரத்தோடு இணைந்ததாகத் திருக்காமக் கோட்டம் அமைக்கப்பட்டது. திருக்காமக் கோட்டம் என்ற பெயர் இலங்கைச் சாசனங்களில், முதன்முதலாக, அண்மையில் அடையாளங்காணப்பட்ட கல்வெட்டிலே பதிவாகியுள்ளது. பிற்காலத்துக் கல்வெட்டுகளிலும் நூல்களிலும் அந்தப் பெயரைக் காணவில்லை. சிவன் கோயிலுடன் அமைக்கப்படும் அம்மன் கோயிலைத் திருக்காமக்கோட்டம் என்று சொல்வது இலங்கைத் தமிழரின் மொழி வழக்கிலே ஒரு பொது வழமையாகவில்லை.

முன்பு கவனித்தவாறு கோமரங் கடவலவிலுள்ள கல்வெட்டு சக்திபீடம் பற்றியது. அதனை அமைத்தவன் குலோத்துங்கசோழ காலிங்கராயன் என்னும் பிரதானி. அவன் அதிகாரமும் படைபலமும் மிகுந்த செல்வாக்கும் பெற்றிருந்தவன் என்பதைக் கல்வெட்டு வாசகத்தின் குறிப்புகளால் அறியமுடிகின்றது. அவன் இலங்கையினைக் கைப்பற்றி (ஈழமான மும்முடிசோழ மண்டலமெறிந்து). அங்கு கங்க வம்சத்துக் காலிங்க விஜயபாகு என்பவனை வீராபிஷேகம் பண்ணுவித்து. அவனுக்கு அரச பதவி வழங்கியவன். "கங்கராஜ காலிங்க விஜயபாகு தேவற்கு வீராபிஷேகம் பண்ணுவித்து" என்பது இதனைக் குறிக்கும் சாசனத் தொடர். இவை வேறெங்கும் காணப்படாத விபரங்கள் அதிசயமானவை. பொலன்னறுவை இராசதானியின் இறுதிக்கால வரலாறு பற்றி வரலாற்றறிஞர்களிடையே பரபரப்பை ஏற்படுத்தக்கூடியவை.

விஜயபாகு என்பது காலிங்க மாகனின் மறுபெயர் என சிகாய சங்கிரஹய குறிப்பிடுகின்றது. காலிங்க மாகன் கங்கா குலத்தவன். அது மாகனைப் பற்றிய விபரங்களைக் கூறும் நூல்களிற் காண முடியாத அம்சமாகும். காலிங்க குலத்தவனான நிசங்கமல்லனின் (1187 - 1196) முதன்மைத் தேவியான கல்யாணவதி கங்கவம்சத்தவள். பொலன்னறுவையிற் சில காலம் அரச பதவிபெற்றிருந்தவள்.

எனவே, மாகனின் படையெடுப்பு பொலன் னறுவை இராசதானியின் அரசுரிமைப் போராட்டங்களோடு தொடர்புடையது என்பது இப்பொழுது தெளிவாகின்றது. பொலன்னறவையில் நெடுங்காலமாக நிகழ்ந்த அரசுரிமைப் போர்களிலே சோழர் தீர்க்கமான முறையிலே தலையிட்டதன் பயனாகவே காலிங்க மாகன் அரச பதவியைப் பெற முடிந்தது. மூன்றாம் குலோத்துங்க சோழனின் (1178 - 1218) ஆணைப்படி காலிங்கராயன் பொலன்னறுவையைக் கைப்பற்றிக் காலிங்கமாகனை அரசனாக்கி வீராபிஷேகம் பண்ணுவித்தானென்று அனுமானித்துக் கொள்ள முடிகின்றது.

இராஜராஜன், முதலாம் இராஜேந்திரன், சோழ இலங்கேஸ்வரன் முதலிய சோழ அரசர்களைப் போலக் காலிங்கராயன், சாசனவாசகத்திலே சொல்லப்பட்டவாறு திருக்கோணமலையில் அமைந்த பெருமான் மீது மிகுந்த அபிமானம் கொண்டிருந்தான். கல்வெட்டின் வாசகம் அவனைத் தன்மைநிலையிற் குறிப்பிடுவதால் அது அவன் மொழிந்த வாசகமாகவே அமைந்துள்ளது என்று கருதமுடிகின்றது. எனவே திருத்தலம், திருக்காமக்கோட்டம், அதனைப் பற்றிய நிவந்தங்கள் தொடர்பான விபரங்கள் எல்லாம் அவன் சொன்னவையாகும்.

சக்தி பீடம் அமைக்கப்பட்ட தலம் மிகவும் புராதனமானது. உன்னதமானது என்பதால் அவன் அதனை ஆதியாய் சுவயம்புவுமான திருக்கோணமாமலை எனச் சிறப்பித்துக் கூறுகின்றான். அவன் உற்சவ காலங்களிற் கோணைநாதரை மிகுந்த ஆராமையோடும் பணிவுடனம் நிலத்திலே விழுந்து அஷ்டாங்க நமஸ்காரம் பண்ணும் வழக்கமுடையவன். திருக்கோணமாமலையுடைய நாயனாரை தெண்டன் பண்ணி எனக் கல்வெட்டு வாசகத்தில் வரும் தொடரினால் இதனை அறியமுடிகின்றது.

காலிங்கராயன் ஆலய வழிபாடுகளைச் செய்யத் தொடங்கிய காலத்தில் அங்கு அம்மன் கோயில் இருக்கவில்லை. இன்னாயநாற்கு சக்தி பிரதிஷ்டை இல்லாமையில் அத்தகைய கோயிலை அமைப்பித்தான். திருக்காமக்கோட்டத்தை அமைப்பித்து, அங்கு அம்மனின் படிமமொன்றை எழுந்தருளுவித்து. அதனை அக்கோட்டத்திற் பிரதிஷ்டை பண்ணுவித்தான். திருக்காமக்கோட்ட நாச்சியாரை எழுந்தருளுவித்துத் திருப்பிரதிஷ்டை பண்ணுவித்து என்பது சாசன வாசகத்திலுள்ள இதனைப் பற்றிய குறிப்பாகும்.

கோயிற் பணிகளையும் வழிபாடுகளையும் புரிவதற்கு வேண்டிய நிவந்தமாகக் காலிங்கராயன் நிலங்களை வழங்கினான். திருப்படிமாற்று. மண்டபக்கொற்று என்பவற்றுக்கான நிவந்தமாக நிலங்கள் வழங்கப்பட்டன என்று சொல்லப்படுகின்றது. இவ்விரு சொற்றொடர்களும் இலங்கையிலுள்ள வேறெந்தத் தமிழ்க் கல்வெட்டிலும் காணப்படவில்லை. ஆயினும் அவை தென்னிந்தியத் தமிழ்க்கல்வெட்டுகள் சிலவற்றிலே காணப்படுகின்றன. அவற்றைத் தற்காலிகமாக முறைமாறி வெவ்வேறு காலங்களிற் கோயிற்பணி புரிபவர்கள். வழிபாடு நிகழும் வேளைகளில் மண்டபத்தில் உபசாரங்களைச் செய்பவர்கள் ஆகியோரை அவ்விதமாகக் குறிப்பிட்டனர் எனக் கருதலாம்.

நிவந்தமாக வழங்கிய நிலங்கள் லஷிகாமபுரத்து (நாலூ)ர்களில் உள்ளவை வேசார் என்னும் வகைக்குரியவை குடியிருப்புகளும் விளைநிலங்களும் அடங்கியவை 1153,ல் எழுதப்பட்ட மாங்கனாய்க் கல்வெட்டில் தெல்வேசார் கிரது. நரது வெசார் என்னும் தொடர் காணப்படுகின்றது. ஒரு வகை நிலப்பிரிவைக் குறிக்கும் பிரதேச மொழி வழக்கான வேசார் என்னும் சொல் காலப்போக்கில் மறைந்து விட்டது.

லஷிகாமபுரம் காலிங்க ராயப்பற்றின் பிரிவான மானாமத்து நாட்டின் பகுதி என்று இச்சாசனம் குறிப்பிடுகின்றது. நிலப்பிரிவுகளைக் குறிக்கும் இம்மூன்று பெயர்களும் காலப்போக்கில் மறைந்து விட்டன. இவற்றுள்ள லஷிகாமபுரம், காலிங்க ராயப்பற்று என்பன இலங்கையிற் கிடைத்துள்ள தமிழ்ச்சாசனங்களில் இந்தக் கல்வெட்டில் மட்டுமே காணப்படுகின்றன.

மானாமத்து நாடு வெல்கவேரம் பற்றிக் குறிப்பிடும். 11ம் நூற்றாண்டுக்குரிய கல்வெட்டொன்றிலே குறிப்பிடப்பெற்ற மானாவதிளா நாடு என்ற பெயரின் உருமாறிய வடிவமாகும். காலிங்கராயன் கல்வெட்டு உருவாக்கப்பட்ட காலத்தில் மானாமத்து நாடு காலிங்கராயப்பற்றின் பிரிவாகும். மானாவதிளா நாடு என்பது அபயாஸ்ரய வளநாடு என்னும் பிரிவில் அடங்கியிருந்தமை பற்றிக் காலத்தால் முற்பட்ட சாசனக் குறிப்புள்ளமையால் அபயாஸ்ரய வளநாடு காலிங்கராயப்பற்றில் உள்ளடக்கப்பட்தென்று கருதலாம்.

எமக்குப் பிராப்தமாய் வருகின்ற காலிங்கராயப்பற்று என்று காலிங்கராயன் சொல்வதால் அது அவனது ஆட்சிப்புலமாதல் வேண்டும். அவன் மூன்றாங்குலோத்துங்க சோழனிடமிருந்து பதவி பெற்றவன் என்பது குலோத்துங்கசோழ காலிங்கராயன் என்ற அவனது பட்டப்பெயரால் உணரப்படும். மூன்றாங்குலோத்துங்கனின் ஆட்சிக் காலத்தில் இலங்கை மீது இடையிடையே சோழரின் படையெடுப்புகள் நடைபெற்றன. அநுராதபுரம் வரை அவனின் ஆதிக்கம் ஏற்பட்டிருந்ததென்று திருப்புனம் கல்வெட்டுக் குறிப்பிடுகின்றது.

இலங்கையிற் காலிங்க மாகன் அரச பதவி பெறுவதற்கு முன்பு சோழர் கிழக்கிலங்கையிற் சில பகுதிகளைக் கைப்பற்றிவிட்டு அங்கு காலிங்கராயனை ஆட்சியதிகாரியாக நியமித்தனர் என்று கருதலாம். அவன் திருகோணமலைப் பிராந்தியத்துப் பிற்காலத்து வன்னிபங்களின் முன்னோடியாகக் கொள்ளத்தக்கவன். பற்று என்பது காலப்போக்கில் நிலப்பிரிவுகளைக் குறிக்கும் பெயராகிவிட்டது. பற்று என்ற சொல் இங்கு ஆராயப்படும் கல்வெட்டிலே தான் முதன் முதலாகக் காணப்படுகின்றது. அது வன்னிபங்களின் ஆள்புலங்களின் பெயராகவம் வழங்கியது. தம்பலகாமம் பற்று. கட்டுக்குளம் பற்று. தென்னமரவடிப் பற்று. மண்முனைப் பற்று என்பன அதற்கான உதாரணங்கள்.

இக்கட்டுரையில் இதுவரை கவனித்த விடயங்களை மேல்வருமாறு சுருக்கமாகத் தொகுத்துக் கூறலாம். மிக அண்மையில் கோமரங் கடவலவிற் கண்டுபிடிக்கப்பட்ட தமிழ்ப் பாறைக்கல்வெட்டு சக்தி பீடமான திருக்காமக்கோட்டம் பற்றியது. அது குலோத்துங்கசோழ காலிங்கராயன் என்னும் பிரதானியின் கல்வெட்டு.

அது அவனுடைய சொற்படி எழுதப்பட்டுள்ளது. அவனைத் தன்மை நிலையில் (காலிங் கராயனேன், எமக்குப் பிராப்தமாய் வருகிற காலிங்கராயப்பற்று) வைத்தே விபரங்கள் சொல்லப்படுகின்றன. வரிவடிவ அமைப்பு, பதிவாகியுள்ள விபரங்கள் என்பவற்றின் அடிப்படையில் அதனைப் பொலன்ன றுவை இராசுதானியில் ஆட்சி புரிந்த காலிங்க மாகனின் ஆட்சியின் (1215 - 1255) முற்பகுதிக்கு உரியதாகக் கொள்ளலாம்.

ஒரு வரலாற்று ஆவணமென்ற முறையில் அதற்குப் பல சிறப்புகள் உண்டு. பல பிரதானமான விடயங்கள் தொடர்பான அதிசயமான விபரங்கள் அதிற் பதிவாகியுள்ளன. அவை வேறெங்கும் காணப்படாதவை. நெடுங்காலமாகப் பொலன்னறுவை இராசதானியில் நடைபெற்ற ஆட்சியுரிமைப் போர்களிற் சோழரின் தலையீடு. விஜயபாகு என்னும் பெயருடைய காலிங்க மாகன் சோழப்படைகளின் ஆதரவோடு பொலன்னறுவையில் அரச பதவி பெற்றமை. திருகோணமலைப் பிரதேச வரலாறு. திருக்கோணமாமலையில் அமைந்த திருக்காமக்கோட்டம் என்பன தொடர்பான. மறைந்துபோன சில பிரதானமான வரலாற்றுக் குறிப்புகள் இக்கல்வெட்டின் மூலம் வெளிவருகின்றன.

அவற்றுள் மூன்றாம். நான்காம் விடயங்கள் பற்றிய குறிப்புகளை இங்கு ஓரளவு விபரமாக விளக்க முடிந்தது. கல்வெட்டிலே காணப்படும் திருத்தலத்தின் பெயரைச் சரியாக அடையாளம் காண்பது அவசியமாகும். அது திருக்கோணமாமலை என்பதில் எதுவிதமான சந்தேகமுமில்லை.

அடிக்குறிப்புகள்

1. K.Indrapala. "A Tamil Inscription from Nilaveli, Trincomalee District", James Thevathasan Rutnam Felicitation Volume ed. Indrapala K., Jaffna Archaeological Society, Jaffna, Pp. 164 - 169 சி.பத்மநாதன். இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள். கொழும்பு. 2005. ப.406..

2. மேலது ப.407

3. நிலாவெளிக் கல்வெட்டின் பத்தாவது வரியில் சுடர் கோணமாமலை என்ற தொடர் வருகின்றமை குறிப்பிடற்குரியது. இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள். ப.406.

4. மேலது

5. சி.பத்மநாதன். இலங்கையில் இந்து சமயம். குமரன் புத்தக இல்லம். கொழும்பு. இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள். கொழும்பு. 206. பக்.101-111

6. K.A.Nilakanta Sastri, The Coals, University of Madras, 1955, p.719.

7. காலிங்க விஜயபாகு என்னும் பெயர் மாகனுக்குரியதென்று நிகாய சங்கிரஹய. சத்தர்ம ரத்னாகரய என்னும் நூல்கள் குறிப்பிடும்,Amaradasa Liyanagamage, The Decline of polonnaruwa and The Rise of Dambadeniya, Published by the Department of Cultural Affairs, Colombo, 1968,p,83.

8. மானாபாரணன் தலைமையிலுள்ள படையினர் இலங்கையின் அரசனாக மாகனை அபிஷேகம் பண்ணினார்கள் என்று சூளவம்சம் கூறும். அந்நூலும் கோமரங் கடவலவிலுள்ள கல்வெட்டும் ஒரே நிகழ்ச்சியினையே குறிப்பிடுகின்றன போலத் தெரிகின்றது. குலோத்தசோழ காலிங்கராயன் ஏவினபடியே மானாபரணன் முதலானோர் மாகனை மன்னனாகப் பொலன்னறுவையில் அபிஷேகம் பண்ணினார்கள் என்று கருதலாம். சூளவம்சம். 40:71 - 75; The Decline of polonnaruva... .p.107.

9. நாச்சியார் என்ற சொல் நாயனார் என்பதன் பெண்பால் வடிவமாகும். உடையாரை வழமைபோலப் பெயர் குறிப்பிடாது நாயனார் என்று குறிப்பிட்டதனால் அம்மனின் சிறப்புப் பெயரைக் குறிப்பிடாது நாச்சியார் என்று பதிவு செய்துள்ளனர்.

10. பேராசிரியர் சுப்பராயலுவின் தொகுப்பான தமிழ்க் கல்வெட்டுச் சொல்லகராதியில் இச்சொற்றொடர்கள் காணப்படுகின்றன. தமிழ்க் கல்வெட்டுச் சொல்லகராதி. சாந்தி சாதனா. சென்னை. இரண்டாம் தொகுதி. 2003. பக்.306. 375.

11. "மிந்தன் கொற்றனேன் கஜபாகு. தேவர் எனக்கு ஜீவிதமாக இட்ட இத்தெல் வேசாரும் கிரது நரது வேசாரும்.." இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள். பக். 331. 443.

12. A.Vellupillai, Ceylon Tamil inscriptions, Part I, 1971, Pp 12–19.


13. மேலது

14. இக்கல்வெட்டிலுள்ள சில தொடர்களை விளக்குவதற்கு பிரம்மஸ்ரீ மோகன் சர்மா, கலாநிதி க. இரகுபரன், பேராசிரியர் ஸ்ரீ பிரசாந்தன், டாக்டர் த.ஜீவராஜ் ஆகியோரிடமிருந்து ஆலோசனைகள் பெறப்பட்டன. அவர்களுக்கு எமது நன்றிகள் உரித்தானவை.

15. புராதனமான சிவன்கோயில்களில், 12ஆம் நூற்றாண்டுவரை, அம்மனுக்குத் தனிக்கோயில் அமைக்கும் வழக்கமில்லை. அவ்வாறான அம்மன் கோயில்களிற்காலத்தால் முற்பட்டவை இரண்டாம் இராஜராஜன் அமைப்பித்த அருங்கலை விநோதமான ராஜராஜேஸ்வரத்தில் உள்ளன. அங்கு இரண்டு சக்திபீடங்கள் அமைந்துள்ளன. அவற்றிலொன்று தேவநாயகி அம்மன் கோயில் அங்குள்ள அம்மன் கோயில்களில் ஒன்றை மூன்றாங்குலோத்துங்க சோழன் அமைப்பித்தானென்று நீகண்ட சாஸ்திரி கருதுவார்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அம்புலிமாமா

# வாழத் தெரிந்த எதிரிகள்



(நேற்றைய தொடர்ச்சி)

இதற்குள் பிரமுகர்கள் இருவரும் தம் அபிப்பிராயங்களை உடனேயே தெரிவிக்க வேண்டுமெனப் போட்டி போட்டுக் கொண்டு தம் ஆட்களை அனுப்பத் தீர்மானித்தார்கள். வையாபுரியின் ஆள் மன்னனைக் கண்டு "உரத்தை வியாபாரி வாயிலாக விற்காமல் அரசாங்கமே நேரடியாக விவசாயிகளுக்குக் கொடுக்கலாம்" என்று சொல்வானாம்.

இந்தத் தகவலை கோபாலன் வைத்தியலிங்கத்திடம் தெரிவிக்கவே அவரும் "பேஷ் சரியான தகவல் கொண்டு வந்தாய். விவசாயிகள் எல்லாம் உரத்தை என்னிடம் கொடுத்து விட்டுத்தானே வாங்கிக் கொள்வார்கள். இது வியாபாரம் செய்யும் முதல் அனுபவமாக எனக்கு இருக்கும். அதனால் நான் மன்னனிடம் யாரையும் அனுப்பப்போவதில்லை" என்றார். சங்கரன் வையாபுரியிடம் வைத்தியலிங்கம் ஆள் அனுப்ப நினைத் திருப்பதைக் கூறவே "என் ஆளை மன்னரிடம் அனுப்பவில்லை" என்றார். இதற்குப் பின் கிராம அதிகாரியும் சங்கரனும் கோபாலனும் தலைநகருக்குச் சென்றனர்.

அங்கு அவர்கள் மன்னரிடமும் விதூஷகரிடமும் நடந்ததை எல்லாம் கூறினார்கள். அப்போது மன்னர் "இப்போது நான் என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டார். அப்போது கிராம அதிகாரி மயில்சாமி "அரசே! உரத்தை வையா புரி தான் விற்க வேண்டும் என்று தங்கள் கட்டளை அனுப்புங்கள்.

வைத்தியலிங்கம் தனக்குத் தேவைப்படும் உரத்தை யாரைக் கொண்டாவது வையாபுரியிடமிருந்து வாங்கிக் கொள்வார். இந்தக்கட்டளையை நீங்கள் பிறப்பித்தால் தான் அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள். அவர்கள் தாமாக ஏந்த ஏற்பாட்டையும் செய்து கொள்ள மாட்டார்கள்" என்றார். சங்கரனும் கோபாலனும் விதூஷகனிடம் "நாங்கள் என்ன சொல்லியும் அந்த இரு பிரமுகர்களும் எங்களை நம்பாதது தான் ஆச்சரியமாக இருக்கிறது. நாங்கள் செய்வதெல்லாம் முன் கூட்டியே அவர்களுக்குத் தெரிந்து விடுகின்றது. இது என்ன மாயம்!" என்றனர்.

விதூஷகனும் சிரித்தவாறே "இருவரும் சிறந்த அறிவாளிகள். என்ன நடக்கும் என்பதை முன் கூட்டியே யோசிப்பவர்கள். இருவரும் ஒருவர் அறிவை மற்றவர் பாராட்டுபவர்கள் . அதனால் யார் என்ன சொன்னாலும் கேட்காமல் தாமே யோசித்துப் புரிந்து கொள்வார்கள். அவர்கள் வாழத் தெரிந்த எதிரிகள். இந்த அறிவாளிகளின் செயல்களால் ஊராருக்கு நன்மையே ஏற்படும்" என்றான்.

அப்போது மன்னர் "ஒ! இதிலிருந்து ஒற்றர்கள் சொல்வதை நம்பாமல் நாமே நேரில் கண்டும் யோசித்தும் செயற்பட வேண்டும். இதைச் சொல்லத்தான் கிராம அதிகாரி நான் படை எடுத்துப் போவதைத் தள்ளிப் போடச் சொன்னாரா? சண்டை சச்சரவு இல்லாமல் வாழ வேண்டும் என்ற படிப்பினை எனக்கும் கிடைத்தது.

எதிரிக்கும் நம் போல சாமர்த்தியம் உண்டு என்பதை நாமும் உணர வேண்டும். இதை எனக்கு உணர்த்திய உங்களுக்கு நன்றி" என்று மயில்சாமியிடம் கூறினார். மயில்சாமியும் சிரித்துக் கொண்டே "நான் இரு எதிரிகளுக்கு மத்தியில் கிராம அதிகாரியாக இருந்து அனுபவப்பட்டவன். அதனால் தான் நீங்கள் படை எடுப்பதை தள்ளி வைக்கச் சொல்லி யோசிக்க வைத்தேன" என்றார். மன்னரும் "இனி போரில்லாமல் அமைதியாக ஆளக் கற்றேன்" என்றார் சிரித்துக் கொண்டே.

(முற்றும்)

# கம்பராமாயணம்

## அயோத்தியா காண்டம்




**சுமந்திரன் இடையீடு**

தேர் ஓட்டியாகிய சுமந்திரன் நா அடக்கம் இன்றி, நிலை கொள்ளாமல் தன் மனத்தில் பட்டதை உரைத்தான்.

"நீங்கள் ஆட்சியைத் துறப்பது தக்கதாகப்படவில்லை; என் செய்வது? பழையன கழிகின்றன; புதியன புகுகின்றன. இது உலக இயலின் மாற்றம்; இதை யாரும் தடுக்க முடியாது.

"தோளுக்கு வந்து விட்டவன் இராமன்; அரசு சுமை தாங்கும் ஆற்றல் அவனிடம் உள்ளது."

"நேற்று எப்படியோ அப்படித்தான் இன்றும்; இன்று எப்படியோ அதுதான் நாளையும்; உங்களைப் பொறுத்தவரை எந்த மாற்றமும் இல்லை. உலகம் மாற்றம் விரும்புகிறது. அதனால் அவன் ஆட்சிக்கு வருவது மாட்சிமை உடையது. எனினும், உம்மை இழக்கின்றோம்; அது எமக்கு அதிர்ச்சியைத் தருகிறது" என்று இரங்கற்பா பாடினான்.

தேர் ஓட்டி தன் நிலை மறந்து பேசுவதை தசரதன் விரும்பவில்லை; இராமனை அழைத்து வரச் சொன்னான்.

"அப்பம் எண்ணச் சொன்னேனே தவிர அதில் எத்தனை குழிகள் உள்ளன என்று உன்னைக் கேட்கவில்லை". "கடமையைச் செய்; கதைகள் பேசிக் கொண்டு இங்கு உன் மடமையைக் காட்டாதே". "தேரைச் செலுத்து; இராமனை இங்கு அழைத்து வா" என்று ஆணையிட்டான்.

அதற்கு மேல் அங்கே அவன் நிற்கவில்லை. காற்றிலும் கூடிய வேகத்தோடு காகுத்தன் அரண்மனையை அடைந்தான்.

மனையில் இராமன், தன் மனைவியோடு உரையாடிக் கொண்டிருந்தான்; மகிழ்வு நிரம்பிய சூழலில் அவன் தன் அகமுடையாளிடம் பேசிக் கொண்டிருந்தான்.

அவனிடம் என்ன சொல்வது? உண்மை சொல்வதா? மன்னன் உரைத்தை மட்டும் உரைப்பதா?

"ஆட்சி உனக்குத் தரத் தசரதன் அழைக்கின்றான் என்று கூறவில்லை. அப்படிக் கூறினால் அது மிகைப்படக் கூறுதல் ஆகும்; அதிர்ச்சியும் தருவது ஆகும். ஆசைகளைத் தூண்டி விட்டால் அவை அணைக்க முடியாமல் போகும்; 'செய்தி சொல்ல வந்தவன்' என்ற தன் நிலையை மறக்காமல் செப்பினான்.

"காவலன் உன்னைக் காண ஆவல் கொண்டுள்ளான்" என்றான். அவ்வளவு தான்; அவன் தன் ஆருயிர்த் துணைவியிடம் சொல்லிவிட்டுப் புறப்படவில்லை; ஆடை வேறு மாற்றிக் கொண்டு வருகிறேன் என்று உரை ஆற்றவில்லை; எதற்கு? ஏன்? என்ற வினாக்களைத் தொடுக்காமல் உடனே அவனோடு புறப்பட்டான்.

கரிய மேகம் சூழ்ந்ததுபோல நீல நிறத்தவன் ஆகிய அழகன் தேரில் ஏறிச் சென்றான். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளையலும் மோதிரமும் அழகு தரும் ஆபரணந் தான் என்றாலும், வாக்கு வளம் என்னும் ஆபரணந் தான் ஒரு பெண்ணின் அழியாத ஆபரணமாகும்.
– வாரியார்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பெண்களைத் தாயாகப் போற்றிய தமிழினத்தின் பெருமை அறிமினே!

இன்று சர்வதேச மகளிர் தினம். உலகம் முழுவதும் மகளிர் தினம் கொண்டாடப்படும் இந்த வேளையில், பெண்களை உயர்வாக மதித்துப் போற்றிய நம் தமிழினத்தின் பெருமையை நினைத்துப் பார்ப்பது நன்றியின் பாற்பட்டதாகும்.

அந்த வகையில் உலகிலேயே பெண்ணுக்குச் சம உரிமை கொடுத்த இனமாகத் தமிழினம் உயர்ந்து நிற்கிறது.

சிவனும் சக்தியும் சேர்ந்த அர்த்தநாரீஸ்வரர் வடிவம் இந்த உலகில் ஆண்பாதி பெண்பாதி என்ற தத்துவத்தை உணர்த்தி நிற்பதாகும்.

தம் வழிபடு கடவுளாகிய சிவப்பரம்பொருளும் பார்வதி அம்மையும் குடும்ப சமேதரராய் விளங்குவதனூடு இல்வாழ்க்கையின் பெறுமதியும் அங்கு பெண்ணுக்கு இருக்கக்கூடிய முதன்மையும் சுட்டப்படுகிறது.

தவிர, பெண்களைத் தாயாகப் போற்றும் உயர்பண்பாடு நம் தமிழினத்தின் உன்னதச் சிறப்பு எனலாம்.

பிறந்த நாட்டை, உயிர்ப்பு மொழியை, சமயத்தை தாயாக மதித்து தாய் நாடென்றும் தாய்மொழி என்றும் தாய்ச் சமயம் என்றும் போற்றுகின்ற மரபு எமது பண்புடைமை என்பதில் நாம் மார்தட்ட முடியும்.

இவைதவிர, மனித வாழ்வியலுக்கு அடிப்படையாக அமையக்கூடிய வீரம், செல்வம், கல்வி ஆகிய கொடைகளை அன்னை பராசக்தி தருகிறாள் என்றும் அவள் துர்க்கையாக, இலக்குமியாக, சரஸ்வதியாக வடிவமெடுத்து தாய் அன்பு கொண்டு எல்லாச் செல்வங்களையும் தந்தருள்வாள் என்ற இறை நம்பிக்கையும் தமிழ் இனத்தில் பெண்கள் அன்பின் வடிவமாக, இறைவனுக்கு ஒப்பான தாய்மையின் அடையாளமாகப் போற்றப்படுவதன் எடுத்துக்காட்டாகும்.

இதற்கு மேலாக, பெண்களுக்கு இழைக்கப்படும் சமூக அநீதி கண்டு அதற்கு எதிராகத் தமிழ்ச்சமூகத்தில் குரல் கொடுத்தவர்கள் ஆண்கள் எனும்போது, பெண்ணினத்தை அவர்கள் எத்துணை உயர்வாகப் போற்றினர். மதித்தனர் என்பது புரிதற்குரியது.

ஆம், பெரும் புலவன் பாரதி பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராகக் குரல் கொடுத்தான்.

***நாணமும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்; ஞானநல்லறம் வீர சுதந்திரம் பேணு நற்குடிப் பெண்ணின் குணங்களாம்***

என்று கர்ச்சித்தான்.

அந்தக் கர்ச்சிப்பு பெண் அடிமைத்தனத்தை உடைத்தெறிவதாக - பெண்களின் உரிமை பாதுகாக்கப்பட வேண்டுமென்ற உணர்வை உலகுக்கு எடுத்துரைப்பதாக அமைந்தது.

ஒருபுறத்தில் பெண்களைத் தெய்வமாகப் போற்றும் பண்பாட்டை பேணிய அதேநேரம், மூடநம்பிக்கை காரணமாக பெண்களை அடிமைப்படுத்தும் அறியாமையைத் தீயிட்டுக் கொளுத்துவதையும் தமிழினம் செய்த தெனில், எம் தமிழினத்தில் பெண்களுக்கு வழங்கப்பட்ட முதன்மை எத்துணை உயர்வானதென்பதை இன்னாளில் நினைத்து நாம் தமிழர் என்பதில் பெருமைப்பட முடியும்.

# உண்மையை பகிரங்கப்படுத்தியதாலேயே அமைச்சுப் பதவியை ஜனாதிபதி பறித்தார்

## விமல் வீரவன்ஸ தெரிவிப்பு

(கொழும்பு)

"நான் அமைச்சரவையிலிருந்து நீதிக்காகவே குரல் கொடுத்தேன். நாட்டின் நலன் கருதி உண்மைகளைப் பகிரங்கமாக உரைத்தபடியால் எனது அமைச்சுப் பதவியை ஜனாதிபதி பறித்துள்ளார். எனினும், நீதி வெல்லும் உண்மை ஒருபோதும் சாகாது".

இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ எம்.பி. தெரிவித்தார்.

நேற்று முன்தினம் மாலை தனது வீட்டில் ஊடகங்களிடம் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது,

"நான் உள்ளிட்ட எனது கட்சியைச் சேர்ந்த 6 உறுப்பினர்களும் பாராளுமன்றத்தில் எதிரணிப் பக்கம் அமரமாட்டோம். அரச பக்கம் இருந்தே சுயாதீனமாகச் செயற்படுவோம். எனக்கு நடந்த அநீதிக்கு நீதி கிடைத்தே தீரும்.

எனது அமைச்சுப் பதவி பறிபோக நிதி அமைச்சர் பஸில் ராஜபக்சவே முழுக்காரணம். அதற்கான விளைவுகளை அரசியல் ரீதியில் அவர் விரைவில் சந்தித்தே தீருவார்.

நாட்டின் பொருளாதாரம் அதலபாதாளத்துக்குள் சென்றமைக்கும் பஸில் ராஜபக்ச பதில் சொல்லியே ஆகவேண்டும்" என்றார். (ம)

## கொரோனா; 8 பேர் பலி

(கொழும்பு)

நாட்டில் மேலும் 8 பேர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்துள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

அதன்படி, நாட்டில் இதுவரை 16,339 பேர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்துள்ளனர். (ம)

# கொழும்பில் இன்று மாபெரும் போராட்டம்

## மக்கள் விடுதலை முன்னணி

(யாழ்ப்பாணம்)

கொழும்பில் இன்று மாபெரும் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக மக்கள் விடுதலை முன்னணியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் இ. சந்திரசேகரன் தெரிவித்தார்.

நேற்று யாழ்ப்பாண மக்கள் விடுதலை முன்னணி அலுவலகத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போது நாட்டில் எரிபொருள் பிரச்சினை தலைதூக்கியுள்ளதன் காரணமாக மக்கள் பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருகின்றார்கள். ஆனால் இந்த அரசாங்கமும் ஒரு ஊமை அரசாங்கமாக மௌனம் காத்து வருகிறது. மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் இந்த அரசாங்கம் மற்றும் அமைச்சர்கள் எந்தவித நடவடிக்கையும் எடுக்காது மௌனமாக வாயை மூடி பார்த்து கொண்டிருக்கிறார்கள்.

இந்த எரிபொருள் விலையேற்றம் கேஸ் விலையேற்றம் மற்றும் பொருட்களுக்கான கட்டுப்பாடு மருந்து தட்டுப்பாடு போன்றவற்றிற்கு கோட்டாபய அரசாங்கத்தினால் எந்த ஒரு தீர்வும் கிடைக்கவில்லை.

எனவே இதனை கண்டித்து கொழும்பில் மகளிர் தினமாகிய இன்று மாபெரும் போராட்டம் ஒன்றினை முன்னெடுக்கவுள்ளதாகவும் தெரிவித்தார். (4-6-104)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன்கிழமை 09 ஆம் திகதி காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை **வவுனியா பிரதேசத்தில்** மலையாபுரத்திக்குளம், ஆசிக்குளம், மறக்கறம்பளை -கணேசபுரம், முகத்தாங்குளம் 1 வது பண்ணை ஆகிய இடங்களில் **கிளிநொச்சி பிரதேசத்தில்** பொறியியல் பீடம், அறிவியல் நகர் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



## சுயநலம் இல்லாத தன்மையே கடவுள்

❖ பக்தன் எப்போதும் தன் மனதில் இறை நினைவை வைத்துக் கொண்டிருப்பதன் மூலமும் எப்போதும் நல்லவைகளால் சூழப்பட்டிருப்பதன் மூலமும் இறுதியாக அதே நிலைக்கு வருகிறான். உன் திருவுள்ளம் நிறைவேறட்டும் என்று கூறுகிறான். தனக்கென்று அவன் எதையும் வைத்துக் கொள்வதில்லை. இது தன்னல மறுப்பு.

❖ தத்துவ ஞானி ஞானத்தின் மூலம் தான் என்று தோன்றுவது ஒரு மாயை என்பதைக் கண்டு அதை எளிதில் விட்டு விடுகிறான். இதுவும் தன்னல மறுப்பே. எனவே கர்மம், பக்தி, ஞானம் எல்லாம் இங்கே சந்திக்கின்றன.

❖ கடவுள் என்பது உலகம் அல்ல என்று பண்டைய ஆச்சாரியர்கள் போதித்ததன் பொருள் இதுதான். உலகம் என்ற ஒன்று இருக்கிறது. கடவுள் என்னும் ஒருவர் இருக்கிறார். இந்த வேறுபாடு முற்றிலும் உண்மையானது.

❖ உலகம் என்று அவர்கள் குறிப்பிடுவது சுயநலத்தையே. சுயநலமின்மையே கடவுள். ஒருவன் பொன் மாளிகையில் சிங்காசனத்தில் அமர்பவனாக வாழ்ந்தும் சுயநலம் சிறிதும் இல்லாதவனாக இருக்கலாம். அவன் கடவுளில் வாழ்கிறான்.

❖ மற்றொருவன் கந்தை அணிந்து குடிசையில் வாழலாம். தனக்கென்று உலகில் எதுவுமமே இல்லாமல் இருக்கலாம். ஆனால் அவன் சுயநலமுள்ளவான இருந்தால் அவன்தான் இந்த உலகத்தோடு மிக அழுத்தமாக ஒட்டிக்கொண்டு இருக்கிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கலப்பு தேர்தல் முறையில் மாகாண சபைத் தேர்தலுக்கான எல்லை நிர்ணய அறிக்கை-ஒரு பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 13

பதிவு செய்யப்பட்டுள்ள வாக்காளர்களின் எண்ணிக்கை, வாக்கெடுப்புப் பிரிவு மற்றும் வாக்கெடுப்பு மாவட்டம் எண்ணிக்கை, 2017 ஆம் ஆண்டின் போது காணப்பட்ட விதம் அட்டவணை (f) இல் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை (f) வாக்கெடுப்புப் பிரிவுகளின் கட்டமைப்பு - 2017 - மேல் மாகாணம்

| பிரதேசம் | பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை | வாக்கெடுப்புப் பிரிவு | வாக்கெடுப்பு மாவட்டம் |
|---|---|---|---|
| கொழும்பு | 1,652,389 | 15 | 1,053 |
| கம்பஹா | 1,724,309 | 13 | 968 |
| களுத்துறை | 941,742 | 08 | 540 |
| மேல் மாகாணம் | 4,318,440 | 36 | 2,561 |




### கொழும்பு மாவட்டம் பற்றிய தகவல்

வட அகலாங்கு 6° 42' மற்றும் 6° 58',கிழக்கு நெட்டாங்கு 79° 49' மற்றும் 80° 12' இடையில் 699 சதுர கிலோமீற்றர் நிலப்பகுதி உள்ளடங்கும் விதத்தில் அமையப் பெற்றுள்ளது. மாகாணத்தின் மொத்தப் பரப்பில் 19 வீதம் கொண்டதாக பரந்துள்ள இம்மாவட்டம் 676 சதுர கிலோமீற்றர் தரைப் பிரதேசத்தையும் மற்றும் 23 சதுர கிலோமீற்றர் உள்ளக நீரேந்தும் பகுதிகளையும் உள்ளடக்கியது. உள்ளக நீர் வளங்கள் மாவட்டத்தின் மொத்தப் பரப்பில் 3.3 வீதமான பகுதி வரை பரந்துள்ளது.

வடக்கே கம்பஹா மாவட்டத்தையும், தெற்கே களுத்துறை மாவட்டத்தையும், கிழக்கே கேகாலை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களையும், மேற்கே கடலையும் எல்லைகளாகக் கொண்டுள்ள இம்மாவட்டத்தின் வனப்பகுதி 20 சதுர கிலோமீற்றர் அல்லது மாவட்டத்தின் மொத்தப் பரப்பில் 2.9 வீதமென 2010 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்டுள்ளது. நிலப்பகுதியின் அதிகூடிய உயரம் 450+ மீற்றராகும்.

சனத்தொகை மற்றும் வீடுகளின் கணக்கெடுப்பின் (2012) அடிப்படையில் மாவட்டத்தின் சனத்தொகை 2,324,349 ஆகுமென்பதோடு சனத்தொகை அடர்த்தி சதுர கிலோமீற்றருக்கு 3,438 நபர்களாகும். 2012 ஆம் ஆண்டில் 10 வயதிற்கு மேற்பட்ட சனத்தொகையின் எழுத்தறிவு வீதம் 98% ஆகும். நாட்டின் வர்த்தக தலை நகரான கொழும்பு மற்றும் நிர்வாகத் தலை நகரான ஸ்ரீ ஜயவர்தனபுர என்பனவும் கொழும்பு மாவட்டத்திலேயே அமையப் பெற்றுள்ளன. மாவட்டம் மிக உயர்ந்த மட்டத்தில் 77.6 சதவீதம் நகரமயமாக்கல் அடைந்துள்ள போதிலும் கிராமிய பிரதேசங்களும் காணப்படுவதோடு மாவட்டத்தின் 22 வீதமான மக்கள் தொகையினர் கிராமிய பிரதேசத்தில் வாழ்ந்து வருகின்றனர்.

பாராளுமன்றம் மற்றும் அரச அமைச்சுக்கள், திணைக்களங்கள் பெருமளவில் கொழும்பு மாவட்டத்தினுள் அமையப் பெற்றுள்ளதோடு, கொழும்பு நகரம் நாட்டின் மேற்கு கடற்கரையில் அமையப் பெற்றுள்ளது. பாரிய துறைமுகம் மற்றும் அதன் அமைவிடம் காரணமாக இரண்டாயிரம் வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திலிருந்து கொழும்பு ஒரு துறைமுகமாகும். 2016 ஆம் ஆண்டில் மாவட்டத்தின் பெருந்தெருக்களின் நீளம் 864 கிலோமீற்றர் ஆகும். மாவட்டத்தின் வேலை வாய்ப்பு முக்கியமாக சேவைத் துறையில் (70%) அதைத் தொடர்ந்து கைத்தொழிற்றுறையில் (28%) மற்றும் விவசாயத் துறையில் (2%) ஆகும்.

### கொழும்பு மாவட்டத்தின் சனத்தொகை -2012

இனப் பிரிவுகளுக்கமைய சனத்தொகை வேறுபாட்டின் சதவீதம் (2012 ஆண்டின்படி) அட்டவணை (a1) இல் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை (a1)இனப்பிரிவு, சமய அடிப்படையில் சனத்தொகை வேறுபாடு- கொழும்பு மாவட்டம்

| இனப்பிரிவு | எண்ணிக்கை | % | சமயம் | எண்ணிக்கை | % |
|---|---|---|---|---|---|
| சிங்களவர் | 1,778,971 | 76.5 | பௌத்தம் | 1,632,225 | 70.2 |
| இலங்கைத் தமிழர் | 235,090 | 10.1 | இந்து | 186,454 | 8.0 |
| இந்தியத் தமிழர் | 24,298 | 1.0 | இஸ்லாம் | 274,087 | 11.8 |
| இலங்கை முஸ்லிம் | 249,609 | 10.7 | ரோமன் கத்தோலிக்கம் | 162,314 | 7.0 |
| வேறு | 36,390 | 1.6 | வேறு கிறிஸ்தவம் | 66,994 | 2.9 |
| | | | வேறு | 2,275 | 0.1 |
| மொத்தம் | 2,324,349 | 100 | மொத்தம் | 2,324,349 | 100 |

அட்டவணைக்கமைய சனத்தொகையில் பெரும்பான்மை (76.5%) வீதம் சிங்களவர்கள் என்பதோடு அதில் 70.2 சதவீதத்தினர் பௌத்த சமயத்தைப் பின்பற்றுபவர்களாகும். 10.7 சதவீத்தினர் இலங்கை முஸ்லிம் மக்களாகும். இஸ்லாம் சமயத்தைப் பின்பற்றுவோர் 11.8 சதவீதத்தினர் என்பதோடு மாவட்டத்தினுள் தமிழ் மக்களின் சனத்தொகை (இலங்கை மற்றும் இந்தியத் தமிழர்கள்) 11.1 சதவீதமாகும். இந்து சமயத்தை பின்பற்றுவோர் 8 சதவீதமும் றோமன் கத்தோலிக்க மக்கள் 7 சதவீதமும் வாழ்ந்து வருவதோடு கிறிஸ்தவ சமயத்தைப் பின்பற்றுவோர் 2.9 சதவீதமாகும். ஏனைய சமயங்களைப் பின்பற்றும் மக்களின் எண்ணிக்கை 0.1 சதவீதமாகும்.

அட்டவணைக்கமைய சனத்தொகையில் பெரும்பான்மை (76.5%) வீதம் சிங்களவர்கள் என்பதோடு அதில் 70.2 சதவீதத்தினர் பௌத்த சமயத்தைப் பின்பற்றுபவர்களாகும். 10.7 சதவீத்தினர் இலங்கை முஸ்லிம் மக்களாகும். இஸ்லாம் சமயத்தைப் பின்பற்றுவோர் 11.8 சதவீதத்தினர் என்பதோடு மாவட்டத்தினுள் தமிழ் மக்களின் சனத்தொகை (இலங்கை மற்றும் இந்தியத் தமிழர்கள்) 11.1 சதவீதமாகும். இந்து சமயத்தை பின்பற்றுவோர் 8 சதவீதமும் றோமன் கத்தோலிக்க மக்கள் 7 சதவீதமும் வாழ்ந்து வருவதோடு கிறிஸ்தவ சமயத்தைப் பின்பற்றுவோர் 2.9 சதவீதமாகும். ஏனைய சமயங்களைப் பின்பற்றும் மக்களின் எண்ணிக்கை 0.1 சதவீதமாகும்.

கொழும்பு மாவட்டத்தில் பிரதேச செயலக மட்டத்தில் சிறுபான்மைச் சமூகங்கள்-2012

| பிரதேச செயலகம் | தமிழர் | முஸ்லிம் |
|---|---|---|
| கொழும்பு | 106829 | 129492 |
| கொலன்னாவை | 17567 | 40950 |
| கடுவெலை | 5338 | 2180 |
| ஹோமாகம | 2442 | 596 |
| ஹங்வெல்லை | 12332 | 852 |
| பாதுக்கை | 1574 | 1034 |
| மஹரகம | 3886 | 1379 |
| ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை | 8243 | 5529 |
| திம்பிரிகஸ்யாயை | 70143 | 35965 |
| தெஹிவளை-கல்கிஸ்ஸ | 13802 | 18538 |
| இரத்மலானை | 8726 | 9295 |
| மொரட்டுவை | 5393 | 2698 |
| கெஸ்பேவை | 3104 | 1101 |
| கொழும்புமாவட்டம் | 259379 | 249609 |

**மேல் மாகாணத்தின் மொத்தப்பரப்பில் 19 வீதம் கொண்டதாக பரந்துள்ள கொழும்பு மாவட்டம் 676 சதுர கிலோமீற்றர் தரைப் பிரதேசத்தையும் மற்றும் 23 சதுர கிலோமீற்றர் உள்ளக நீரேந்தும் பகுதிகளையும் உள்ளடக்கியது.**

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மழைவீழ்ச்சி...

ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அதன் தலைவர் ஜனக ரத்நாயக்க இதனைத் தெரிவித்தார்.

இன்றுமுதல் மின்வெட்டு காலத்தை 2 மணிநேரமாகக் குறைக்க முடியும் என்று ஆணைக்குழுவின் தலைவர் சுட்டிக் காட்டினார்.

இதேவேளை, மின்வெட்டு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படாமல் இலங்கை மின்சார சபையினால் மட்டுமே மேற்கொள்ளப்படுவதாக ஜனக ரத்நாயக்க பொதுமக்களுக்கு நினைவுபடுத்தினார். (ம)

## தேசிய கால்பந்...

தேசிய கால்பந்தாட்ட அணி வீரர் டக்ஸன் பியூஸ்லஸின் உடல் ஆயிரக் கணக்கான மக்களின் அஞ்சலியின் பின்னர் நல்லடக்கம் செய்யப்பட்டது.

மன்னார் பனங்கட்டு கொட்டு பகுதியை சேர்ந்த டக்ஸன் பியூஸ்லஸ் மாவட்ட அணி, மாகாண கால்பந்தாட்ட அணி மற்றும் தேசிய அணி வீரராக பிரகாசித்து வந்த நிலையில் மாலைதீவு கழக அணி ஒன்றுக்காக ஒப்பந்த ரீதியாக விளையாடிவந்த நிலையில் மரணம் அடைந்தார்

அன்னாரின் உடல் பொதுமக்களின் அஞ்சலிக்காக அவரின் வீட்டில் வைக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று மதியம் ஒரு மணியளவில் ஊர்வலமாக நல்லடக்கத்திற்கு எடுத்து செல்லப்பட்டது.

மதத்தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், விளையாட்டு வீரர்கள், இலங்கை உதைபந்தாட்ட அணி வீரர்கள் மற்றும் பயிற்றுவிப்பாளர்கள், வடமாகாண கால்பந்தாட்ட அணி வீரர்கள் மற்றும் மன்னார் மாவட்டத்தை சேர்ந்தவர்கள் மாத்திரம் அல்லாது ஆயிரக்கணக்கான மக்கள் பியூஸ்லஸின் உடலுக்கு கண்ணீர் மல்க அஞ்சலி செலுத்தினர். (ம-285)

## ஆண் ஒருவரின்...

வயதுடைய ராஜேந்திரன் சுபாஸ்கரன் எனும் இளம் குடும்பஸ்தரே தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார்

இச்சம்பவம் தொடர்பாக ஜெயபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன் இறந்தவரின் சடலம் நீதவான் முன்னிலையில் எடுக்கப்பட்டு கிளிநொச்சி வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது. (ம -316)

## பூப்புனித நீராட்டு...

சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

பூப்புனித நீராட்டு விழாவின்போது இந்த திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக வீட்டின் உரிமையாளர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதன்போது 14 பவுண் தங்க நகை மற்றும் 2 ஆயிரத்து 500 பவுண்ஸ் வெளிநாட்டு நாணயத்தாளும் இதன்போது திருடப்பட்டுள்ளது.

வீட்டின் பின்பக்க ஜன்னல் கம்பிகளை உடைத்து உள்ளே நுழைந்த திருடர்கள், பிரத்தியேகமான இடத்தில் வைக்கப்பட்டு இருந்த 12 பவுண் தாலி உட்பட 2 பவுண் சங்கிலியை திருடிச் சென்றுள்ளனர்.

திருடப்பட்ட நகையின் பெறுமதி 15 இலட்சம் ரூபாய் என கணக்கிடப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை அச்சுவேலி குற்றத்தடுப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-33)

## யாழ்.இந்திய...

சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

நேற்றைய தினம் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதரகத்தில் துணைத்தூதர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரனை யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகள் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

குறித்த சந்திப்பில் யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத் தலைவர் அன்னலிங்கம் அன்னராசா, உப தலைவர் நா.வர்ணகுலசிங்கம் மற்றும் காரைநகர் அம்பாள் கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க தலைவர் கந்தசாமி ராஜசந்திரன் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-33,104)

## நாடு சீர்குலைந்...

பல்வேறு வாக்குறுதிகளை வழங்கி பொதுமக்களை ஏமாற்றி ஆட்சிக்கு வந்த இந்த அரசாங்கம் இரண்டு வருடங்களில் நாட்டை சீர்குலைத்துள்ளது. தொடர்ந்து நாம் அமைதியாக இருக்கப் போவதில்லை.

பொருட்களை வாங்குவதற்காக நாடு முழுவதும் மக்கள் வரிசையில் நிற்பது, அரசாங்கம் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறிவிட்டது என்பதை காட்டுவதாகக் கூறினார்.

இதேவேளை அரசாங்கத்திற்கு அழுத்தங்களை பிரயோகிக்கும் நோக்கில் எதிர்வரும் 25ஆம் திகதி கொழும்பு ஹைட் பார்க் மைதானத்தில் போராட்டமொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த போராட்டமானது நாட்டைப் பாதுகாக்கும் தேசிய நிகழ்வாக அமையும் என பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார். (ம)

## 7½ மணி...

ளது.

இதன்படி E மற்றும் F ஆகிய வலயங்களுக்கு உட்பட்ட பகுதிகளுக்கு காலை 8 மணிமுதல் மாலை 6 மணிவரையான காலப்பகுதியினுள் சுழற்சி முறையில் 5 மணித்தியாலங்களுக்கும் மாலை 6 மணிமுதல் இரவு 11 மணிவரை இரண்டரை மணித்தியாலங்களுக்கும் மின் துண்டிக்கப்படவுள்ளது.

P,Q,R,S,T,U,V,W ஆகிய வலயங்களுக்கு உட்பட்ட பகுதிகளுக்கு காலை 8 மணிமுதல் மாலை 5 மணிவரையான காலப்பகுதியினுள் 2 மணித்தியாலங்களுக்கும் மாலை 5 மணிமுதல் இரவு 9 மணிவரையான காலப்பகுதியினுள் ஒரு மணித்தியாலத்துக்கும் மின்துண்டிப்பு அமுல்படுத்தப்படும் என மின்சார சபை தெரிவித்துள்ளது. (ம)

## வவுனியா தெற்கு...

மானது (சிங்கள பிரதேச செயலகம்) வவுனியா, மன்னார் வீதியில் காமினி வித்தியாலயத்திற்கு அண்மையில் உள்ள புகையிரத கடவை அருகில் அமைந்துள்ளது.

குறித்த பகுதியானது தமிழ் மக்கள் செறிவாக வாழும் பகுதியாக உள்ளதுடன், குறித்த பிரதேச செயலகத்திலும் உதவிப் பிரதேச செயலாளர் உட்பட அதிகளவிலான உத்தியோகத்தர்கள் தமிழ், முஸ்லிம் மக்களாகவே உள்ள நிலையில் குறித்த பிரதேச செயலக வளாகத்தில் பிரமாண்டமாக பீடம் ஒன்று அமைக்கப்பட்டு புத்தருடைய சிலை நிறுவப்பட்டுள்ளது.

வடக்கில் இடம்பெற்று வரும் அரசின் பௌத்த மயமாக்கல் திட்டங்களுக்கு பிரதேச செயலகங்களும் உடந்தையாக செயற்படுகின்றனவா? என பொதுமக்கள் பலரும் கேள்வி எழுப்பியுள்ளனர். (ம-250)

## ஈஸ்டர் தாக்குதல்...

பதற்கு உறுப்பு நாடுகள் ஒத்துழைக்குமாறு, பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

49ஆவது மனித உரிமைகள் பேரவையில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தத்தாக்குதல் நடத்தப்பட்டு ஏறக்குறைய 3 ஆண்டுகள் நிறைவடைகின்றன.

ஆனால் இன்னும் இதற்கு நீதி வழங்கப்படவில்லை.

அதற்கு மாறாக நீதிகோருகின்றவர்கள் துன்புறுத்தப்படும் நிலைமையே காணப்படுகிறது.

சில இஸ்லாமிய பயங்கரவாதிகளின் செயற்பாடாக காட்டப்பட்டபோதிலும் அது பாரிய அரசியல் சூழ்ச்சியின் ஒரு பகுதி என விசாரணைகளில் தெரியவந்தது.

எனவே ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பான விசாரணைகளின் ஊடாக உண்மை வெளிப்படுத்தப்பட வேண்டும் என பேராயர் கர்தினால் மல்கம்ரஞ்சித்ஆண்டகை கோரிக்கை விடுத்துள்ளார். (ம)

## சிறு...

ஐ.நா மனித உரிமைகள்ஆணையாளரின் இலங்கை தொடர்பான அறிக்கை [illegible] ஜெனிவாவில் நேற்றைய தினம்விவாதங்கள் இடம்பெற்றிருந்தன.

நேற்றுக் காலை இடம்பெற்ற இந்த விவாதங்களில் இலங்கையின் மனித உரிமை நிலைவரங்கள் குறித்து பிரித்தானியா கடுமையான விமர்சனங்களை முன்வைத்திருந்தது.

பிரித்தானியா முன்வைத்த விமர்சனங்கள் வருமாறு,

"பொறுப்புக்கூறலில் தொடர்ந்து முன்னேற்றம் ஏற்படாதமை தொடர்பில் நீங்கள் வெளியிட்ட கரிசனையை நாங்கள் பகிர்ந்து கொள்கிறோம்.

பல அடையாள மனித உரிமை வழக்குகளில் பின்னடைவுகள் ஏற்பட்டுள்ளமை தொடர்பில் நாம் வருத்தம் தெரிவிக்கின்றோம்.

இழப்பீடுகள் மற்றும் காணாமற்போனோர் தொடர்பான அரசாங்க நிறுவனங்களில் நடந்து வரும் பணிகளை நாங்கள் ஏற்றுக்கொண்டாலும் இது ஒரு விரிவான நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் செயல்முறையுடன் இணைந்திருப்பது மிகவும் முக்கியமானது.

நாட்டின் வடக்கு மற்றும் கிழக்கில் காணி அபகரிப்பு குற்றச்சாட்டுகளுடன் சிறுபான்மை சமூகங்களை ஓரங்கட்டும் செயற்பாடுகள் அதிகரித்துள்ளதை நாங்கள் கரிசனையுடன் கவனிக்கிறோம்" எனக் கூறப்பட்டது. (ம)

தன நிதானய
திகதி - 2022.03.07
சீட்டிழுப்பு இலக்கம் - 729
Z 08 14 79 81
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

மஹஜன சம்பத
திகதி 2022/03/07
சீட்டிழுப்பு இலக்கம் 4699
M 2 0 9 5 3 4
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 07/03/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1047
P 15 01 30 35 42

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1676 நிறம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 07.03.2022 தினம் திங்கள்
Z 19 26 45 59
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 51,209,993/-

சனிதா
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.03.07
சீட்டிழுப்பு இல: 3837
வர்ணம்: நீலம்
ரூ. 6,232,660/-
வெற்றி இலக்கங்கள்
07 28 30 54 V
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சுப்பர் ஜக்பொட் ரூ. 2,198,570/-
திகதி 07.03.2022
சீட்டிழுப்பு வாரம் 3388
வர்ணம் மஞ்சள்
வெற்றி இலக்கங்கள் 21 36 50 61
3 9 8 3 7 0 4
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 12,617,400/-

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
L 29 01 17 29 66
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 219,538,267/-
852
2022.03.07 திங்கட்கிழமை
Web : www.dlb.lk

ஜயோதா
சீட்டிழுப்பு வாரம் 1817
சீட்டிழுப்பு திகதி 07.03.2022
வெற்றி இலக்கங்கள் 04 08 48 66 F
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 32,183,172/-
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

அத கோடிபதி
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு இல: 1502
வர்ணம்: சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2022.03.07
ரூ. 5,044,560/-
30 36 43 66 J
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியர் தேவை

தரம் 1, 2 வகுப்புகளிற்கு பயிற்றப்பட்ட அல்லது முன்பள்ளி டிப்ளோமா தகுதியுடைய ஆசிரியர் விரும்பத்தக்கது.

**மதுரம் கல்வி நிறுவனம்**

**டச்சுவீதி, கோப்பாய் தெற்கு.**

**- 077 912 2918**

(C-3912)



## சாரதி மற்றும் பணியாளர் தேவை

கரடிபோக்குச் சந்தி கிளிநொச்சியில் இயங்கும் குரு ஹாட்வெயார் நிறுவனத்திற்கு பாரஊர்தி சாரதிகள் தேவை. அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். அத்துடன் ஹாட்வெயார் அனுபவம் உள்ள பணியாளர் மற்றும் சீமெந்து விற்பனைப் பிரதிநிதி போன்றோர் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**குரு ஹாட்வெயார்**

**இல. 175, கரடிப்போக்கு சந்தி, கிளிநொச்சி**

**T.P : 077 743 5265**

(C-3907)



Inner Circle

## நிரந்தர வேலை வாய்ப்பு

முதற்தர தொலைத் தொடர்பு சேவை வழங்கும் நிறுவனத்துடன் வடமாகாணத்தில் பணிபுரிய ஓர் அரிய வாய்ப்பு.



தகைமை : GCE O/L & GCE A/L

வயது : 18 - 29

13,500/= - 20,000/=

அடிப்படைச் சம்பளத்துடன் கூடிய தொழிற் பயிற்சியும் இலவசமாக Certificate in Spoken English & Professional Development and Leadership கற்கைநெறியும் வழங்கப்படும். **அதன் நிறைவில் 45,000 ரூபாவிற்கும் அதிக வருமானம் பெறும் வாய்ப்பும்.** (10535)

**மேலதிக விபரங்களுக்கு : 077 999 4807**
**Whatsapp : 076 756 5659**


# கொடுத்ததை பிடுங்குவது ஜனாதிபதியின் வழக்கம்

## முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில

(கொழும்பு)

இந்த ஆட்சியில் அமைச்சுப் பதவியை ஒருவருக்கு வழங்குவதும் அதைப் பிடுங்கி எடுப்பதும் வழமையாகி விட்டது. அது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் குணமாக மாறிவிட்டது என்று புதிய ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது.

கோட்டாபய ராஜபக்சவை ஜனாதிபதி கதிரையில் ஏற்றி அழகு பார்க்க எண்ணினோம். பல சவால்களுக்கு மத்தியில் இறுதியில் எமது ஆசையை நிறைவேற்றினோம். ஆனால், ஜனாதிபதிக் கதிரையில் அமர்ந்த கோட்டாபய ராஜபக்சவுக்கு ஆலோசனை வழங்குகின்றோம் என்ற பெயரில் சிலர் அவரை அவமரியாதைக்கு உட்படுத்தியது மட்டுமன்றி நாட்டையும் சீரழித்தனர்.

இது தொடர்பில் நாம் கேள்விகளை எழுப்பியபோதே எம்மீது அம்பு பாய்ந்தது. நானும் விமல் வீரவன்ஸவும் அமைச்சுப் பதவிகளை இழக்க வேண்டி வந்தது.

இந்தச் சதிவேலைகளுக்குத் தலைமை தாங்கியவர் வேறு யாருமல்லர். அவர் தான் அடுத்த தடவையாவது ஜனாதிபதியாக வரவேண்டும் என்ற கனவுடன் செயற்பட்டு வருகின்றார்.

அமெரிக்கப் பிரஜையான அவர், 2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்சவைத் தோல்வியடையச் செய்து விட்டு நாட்டை விட்டுத் தப்பியோடியதை தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச மறக்கமாட்டார் என்று நம்புகின்றோம்.

ஒரே குடும்பத்துக்குள் இருந்து குழிபறிக்கும் செயல்களில் ஈடுபடும் அவரைத் தேசியப் பட்டியல் ஊடாக பாராளுமன்றத்துக்கு அழைத்தது படுமுட்டாள்தனமானது என்றார். (ம)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (10534)

**076 825 7716 (ஆகாஸ்)**



## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் நாவற்குழியில் 15 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் (நிலப்பரப்பு)
- ஏ9 வீதியில் இருந்து 150 மீற்றர் தூரம்
- நாவற்குழி சந்தியில் இருந்து 500 மீற்றர் தூரம்
- யாழ். பஸ் நிலையத்தில் இருந்து 8 கி.மீ தூரம்
- lanka ashok leyland வாகன விற்பனை நிலையத்திற்கு அருகாமை
- 18 அடி பாதையுடன் இயற்கையான சூழல்
- நல்ல தண்ணீர் ஊற்று நிலம். (10471)

**குரு - 077 623 4204, 077 288 0152**
**076 658 3621, 077 911 6983**



## விரைவு பொதிகள் சேவை

**V2 TRAVELS**

**UK-975/=Kg**

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

**0768226240** DHL

(C-3862)



After A/L's

Start your Future with Internationally Recognized **UK Degree**

**BCAS CAMPUS**
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

23 YEARS OF TRUST & EXCELLENCE IN HIGHER EDUCATION

INTEREST FREE STUDENT LOAN SCHEME

MANAGEMENT
COMPUTING
ENGINEERING
QUANTITY SURVEYING
BIOMEDICAL SCIENCES



BTEC HND

BSc (Hons)
Eng (Hons)
LL.B (Hons)

GLOBAL MBA
MSc Project Management

**HOTLINE 0777 102 131**

BCAS Jaffna Campus | 16, Point Pedro Road, Jaffna    021 221 9910

(C-3911)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.03.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.